REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசீய வார வெளியீடு

மலர் 16 | சுன்னுகம்—பார்த்திப—கார்த்திகை ௨, 18-11-'45—ஞாயிறு | இதழ் 18

# இலங்கை-இந்தியர் நிலைமை?

## வாக்குரிமையும் பிரஜா உரிமையும்

## நேருஜி தலையிட வேண்டுகோள்

[நமது அரசியல்நிருபர்]

**சோல்பெரி அறிக்கையைக்** கொண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் கொடுத்துள்ள புதிய அரசியல் திட்டத்தை அரசாங்கசபை ஏற்றுக்கொண்டு விட்டது. ஆச்சரியமென்ன வென்றால் சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர், வெள்ளைக்காரர் ஆகிய எல்லா வகுப்பினருமே **மனமுவந்து** ஏற்றுக் கொண்டதுதான்! அகில இலங்கைத்தமிழ்க்காங்கிரஸ்என்ற ஸ்தாபனம் மழைக்கு முளைத்த காளான்மாதிரி சோல்பரிப் பிரபுவையும் சகாக்களையும் வரவேற்றுபசாரம் செய்யத் தோன்றிய ஒரு குடுக்கை. ஆரம்பத்தில் சிறுபான்மைக் கட்சியினரின் பிரதிநிதி தாம்தான் என்று இந்தக் காங்கிரஸ் வாலாட்டியது. கொஞ்சம் கொஞ்சமாகச் சோனகரும் பறங்கியரும் மட்டக்களப்பாரும் நழுவிக்கொள்ள, இவர்களெல்லாம் துரோகிகள் என்று சொல்லிவிட்டு பொன்னம்பலம் சகாக்களும் இந்தியரும் மாத்திரம் இதிலிருந்து வந்தார்கள். பொன்னம்பலம் சீமைக்குப் போயும் காரியம் பலிக்கவில்லை என்று கண்டதும் அவரது சகாக்களே அவரை நடுக்கடலில் விட்டுவிட்டுக் கழன்று விட்டனர். ராஜகுலேந்திரன் தமிழ்க் காங்கிரஸின் பெயரைச்சொல்லி அந்தச் செலவில் மேல்நாட்டு யாத்திரை முடித்துக்கொண்டு திரும்பிவிட்டார். ஜெகநாதன் தியாகராஜா மன்ஞர் தேர்தலில் பட்டகடமையையும் மறந்து சேனநாயகா பக்கம் சாய்ந்து விட்டார். இந்த இருவருக்கும் சேனநாயகா தமது மந்திரி சபையில் ஒவ்வொரு ஸ்தானம் தருவதாக வாக்குப்பண்ணியிருக்கிறார் என்றும் ஒரு வதந்தியுலாவுகிறது. போனவாரம் அரசாங்கசபை விவாதம் நடப்பதற்கு முன்பு ஒரு விருந்துபோட்டதாகவும் அதிற் சகலரும் சொந்தம் கொண்டாடிப் பக்கம் சாய்ந்து கொண்டதாகவும் ஒரு கதை.

**ஆனல்** அரசாங்கசபையில் தங்கள் கொள்கையைத் திரஸ்கரித்த இந்தக் காங்கிரஸ் பச்சோந்திகளைப்போலல்லாது, மானத்தை விற்காது பிடிவாதமாக நின்ற இந்தியர்கள் இருவரையும் பாராட்டத்தான் வேண்டும். ஐ எக்ஸ். பெரோரா நியமன அங்கத்தவராயினும் இந்தியர் உரிமைகளுக்கு இந்த அரசியல் திட்டம் பாதகமானது என்று எதிர்த்தார். அடுத்தமுறை நியமன மில்லை என்பது நிச்சயம். ஆகையால் அரசாங்கசபையில் இதுவரைகாலமும் பேசிவந்த ஏகாதிபத்திய முதலாளித்துவப் பேச்சுக்களை இனிமேலும் பேசவேண்டிய அவசிய மில்லைத்தான்! அத்துடன், இப்படி யிறங்கி இந்தியப் பொது மக்களின் அபிமானத்தைப்பெறப் பேசினல்தான் ஒருவேளை பொதுத் தேர்தலில் நிற்கலாம்! அதனலே தான் திவான்பகதூர் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு நன்றிசெலுத்த வேண்டியவர் கூட எதிர்த்துப் பேசவேண்டியிருந்தது.

மற்றவர் நடேசையர். பழைய தோட்டத் தொழிலாளர் இயக்கத்தை ஆரம்பிக்கத் திட்டம் போடுகிறார். அதனல் அவர்களுக்காக இப்போதாவது பரிந்து பேசத்தான் வேண்டும். இன்னெருவர் வைத்தியலிங்கம் இந்தியாவில் நிற்கிறார். அவரும் இங்கிருந்தால் நிச்சயமாக எதிர்த்துத்தான் வாக்களித்திருப்பார்.

**சோல்பரித்திட்டம்** இந்தியருக்குப் படுமோசமானதென்பதை எவரும் மறுக்க முடியாதுதான். நெடுங்காலமாகவே விரோதத்தை வளர்த்து வந்த சிங்களத்தலைவர்கள் நியாயமாகத்தானும் வாக்குரிமை பெறவேண்டிய நிரந்தரவாசிகளான தோட்டத் தொழிலாளருக்குப் பிரஜா உரிமையும் வாக்குரிமையும் வழங்குவார்களா என்பதில் இந்தியர் சந்தேகப்பட நியாயமுண்டு. இருந்தும், சேனநாயகா கேட்கும் ஒருகேள்வி மெச்சத்தக்கது: "என்னை ஒருதரம் நம்புவதற்கு இடங் கொடுங்கள். நான் நியாயம் வழங்குவேன் என்று நம்புங்கள். நான் நிச்சயமாக உங்களைத் திருப்திப்படுத்துகிறேனு இல்லையா என்பதைப் பரிசோதிக்க, அதிகாரத்தை என்கையில் கொடுத்துப் பாருங்கள்" என்கிறார்.

'உன்னை நம்பமுடியாது, போ' என்று சொல்வது இந்த நிலைமையில் பேடித்தனம். இலங்கைக்குக் குடியேற்றநாட்டந்தஸ்து, விடுதலை, சுதந்திரம் என்ற நிலையைப் பெற்றுக் கொள்வதற்காகவே சேனநாயகா வாதாடுவதாகச் சொல்லுகிறார். வகுப்புவாதம் வேண்டாம் என்கிறார். அவருக்கு அரசாங்கசபை மாத்திரமல்ல இலங்கையிலுள்ள பெரும்பான்மையினர் ஆதரவு இருக்கிறது. இந்த நிலையில் கொஞ்சம் சந்தர்ப்பத்தைக் கொடுத்துத்தான் பார்ப்பதில் என்ன குறைந்து விட்டது?

இந்தியப் பிரச்னைதான் இன்று இலங்கையில் முக்கிய பிரச்னை. இதனை, தாம் நேருவைக் கண்டு பேசித் தீர்க்கப்போகிறதாக சேனநாயக சொல்லுகிறார். சேனநாயகா வெறும்பேச்சுக்காரன் அல்ல என்பதையும் பிடித்ததைச் சாதிக்கத் தக்கவர் என்பதையும், எடுத்த கருமத்தை நிச்சயமாக முடிக்க வல்ல முயற்சியுடையவர் என்பதையும் கடந்தகால அனுபவத்தில் நாம் கண்டிருக்கிறோம். ஆகையால், நேருவுடன் பேசி, பேச்சுக்களை இவ்விருவரும் மாத்திரம் நடத்தினல் காரியகாரர்களான இருவரும் விட்டுக் கொடுக்காது, தங்கள் கட்சிகளை ஸ்தாபிப்பதுடன் நிச்சயமாக ஒரு ஒப்பந்தத்துக்கும் வருவார்கள் என்பதில் அவநம்பிக்கை கொள்ளத் தேவையில்லை. சேனநாயகா சொன்னல் சிங்களவர்கள் சரி என்பார்கள்; நேரு சொன்னல் இந்தியர்களும் சரியென்பார்கள். ஆகையால், இவ்விருவரும் பேசி முடித்துக் கொள்வதுதான் யாவராலும் விரும்பத்தக்கது.

**இந்த** நிலைமையில் இலங்கை வாழ் இந்தியர்கள் என்ன செய்யப் போகிறார்கள்? சேனநாயகாவை நம்பப் போகிறார்களா அல்லது பிரிட்டிஷ்காரரை நம்பப் போகிறார்களா? மேலும்பிரிட்டனிடம் முறையிடுவதிற் பயனில்லை யென்பதை இதுவரையில் அவர்கள் உணர்ந்திருக்கவேண்டும். சமீபத்தில் இலங்கை வர்த்தகத்தில் மாத்திரம் அக்கறை கொண்ட இந்தியப் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டு இருவர் சீமைக்குப் போனார்கள். இந்தியாவிலும் அரசாங்கத்தார்களைக் கண்டு பேசினர்கள். இப்பொழுது கிடைத்துள்ள தகவல்களில் 'உலகப் புனருத்தாரணம்' என்று ஒரு போலி நாடகம் நடத்தும் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியப் பிரதிநிதியென வடிகட்டின ஏகாதிபத்தியவாதி சேர் ராமசாமி முதலியாரை நியமித்து அந்நாடகத்தில் வேஷம் போட்டிருக்கிறது. இலங்கை இந்தியர் பிரச்னையையும் அவர்தான் தீர்க்கலாமே என்று இப்போது இந்திய அரசாங்கம் தீர்மானித்திருக்கிறதாம்! 'எண்ணெய்ச் சட்டியிலிருந்து குதித்து நெருப்பில்விழுந்தது போல' என்று ஆங்கிலப் பழமொழியுண்டு. அதேபோலிருக்கிறது பிரிட்டிஷாரிடம் விண்ணப்பிக்கும் இலங்கை — இந்தியர் நிலைமை!

**இன்றைய** நிலைமையில் வெறும் வாய்ப்பேச்சுக்களையும் ரோசத்தையும் விட்டுக் காரியத்தை மாத்திரம் கவனிக்கவேண்டும். அப்படிப் பார்த்தால், சேனநாயகவைத் தட்டிக் கொடுத்து, நேருவுடன் பேசித் தீர்க்கத் தூண்டுவதே புத்திசாலித்தன மானது. இந்தியரெல்லாரும் ஒன்று சேர்ந்து ஒத்துழைக்கவும், பின்வருங் காலத்தில் சௌஜன்யமாயிருக்கவும் இதுவே வழியென்று நினைக்கிறோம். பகைமையை வளர்க்கலாம்; நமது இந்தியா பெரிய தேசமென்று வாதாடலாம். ஆனல் இலங்கையில் வாழ்ந்தாலென்ன வேறெந்த நாட்டில்தான் வாழ்ந்தாலென்ன ஊர் இரண்டுபடவும் அந்நியருக்கு இடமளிக்கவும் நடந்து கொள்வது வாழ்க்கைக்கு இடையூறு. சேனநாயகாவை இயக்கி, வசப்படுத்தி, நேருவுடன் பேசித்தீர்த்து வாழ்வதா, அல்லது பிரிட்டனிடம் முறையிட்டு நீங்காத பிரச்னையாக்கிக்கொண்டு சதா ஆத்திரக் கோலத்துடன் வாழ்வதா மேல் என்பதை இலங்கை இந்தியத் தலைவர்கள் இப்பொழுதே தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.

## இலவசக் கல்வி
### ஆயுள்வேத வைத்தியக் கல்லூரியிலும்

**ஆ**யுள்வேத வைத்தியக் கல்லூரியிற் கற்கும் மாணவர்க்கும் இலவசமாகப் பயிற்சியளிக்கவேண்டும் எனச் சுகாதாரப் பகுதிக் காரிய நிர்வாகசபையினர் சிபார்சு செய்திருக்கின்றனர்.

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் வைத்தியப் பகுதியிற் சேர்ந்து கற்கும் மாணவர்கள் இலவசமாகப் பயிற்றப்பட்டு வருவதால் அதே வசதியை இலங்கை ஆயுள்வேதக் கல்லூரியிற் பயிலும் மாணவர்க்கும் ஏன் அளிக்கக்கூடாதெனச் சுகாதார மந்திரியாருக்கு எடுத்துக்காட்டப்பட்டதாம்.

இப்பொழுது ஆயுள்வேதக் கல்லூரியில் ஏறக்குறைய 120 மாணவர்கள் கற்றுவருகின்றனர். இன்னும் மேலதிகமான மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கும், அதனலேற்படும் பண நிலைமையைப்பற்றியும் அறிக்கை ஒன்று தயாரித்துத் தருமாறு வைத்தியக் கல்லூரிப் பிரதமாசிரியரைச் சுகாதார மந்திரியார் கேட்டிருக்கின்றார்.

## அணுக்குண்டு
### பரம இரகசியமாகும்

**அ**ணுக்குண்டை இரகசியமாக வைத்திருக்கவேண்டுமென்று [illegible] செய்யப்பட்டிருப்பதாக [illegible] மூவரும் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்தபேட்டியொன்றில் கூறினர்கள்.

# ஜவஹரின் வீரகர்ஜனை

## "பாகிஸ்தான் வேண்டுமென்றால் போராடிப் பெறுவதுதானே"

**1942** ஒகஸ்ட் தீர்மானத்தைப்பற்றியும் அதன்பின்பு நடந்த சம்பவங்கள் பற்றியும் முஸ்லீம் லீக் அனுஷ்டித்த கொள்கையை விளக்கிப் பண்டித நேரு தெரிவிப்பதாவது:

"உலகத்தின் பல்வேறு பாகங்களிலுள்ள சமுதாய கட்டுக்கோப்பு முழுவதும் இடிந்து விழுந்துகொண்டிருக்கிறது. சிறு நாடுகள் தனித்து வாழமுடியாமல் அழிந்துவிடக்கூடிய நிலைமையில் இருக்கின்றன, ஒவ்வொரு அடிமைநாட்டிலும் உள்ள மக்கள் புரட்சிக்கொடியை உயர்த்தி யிருக்கின்றனர். இப்படிப்பட்ட காலத்தில் பாகிஸ்தானைப் பற்றியும் தனித்து வாழ்கிறோமென்றும் பேசிக்கொள்வதில் பயனேயில்லை. பாகிஸ்தானைப் பற்றிப் பேசுவது சுலபம்தான். ஆனல் உலகநிலைமையை மனத்திற் கொண்டு பார்த்தால் இத்தகைய திட்டத்தைக் கொண்டிருப்பவர்களை நம்மால் பாராட்ட முடியவில்லை. அடிமை நாட்டில் உள்ள ஒருஅரசியற்கட்சி என்ன லட்சியத்தைக்கொண்டிருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் அதன் வார்த்தைகளிலுள்ள நாணயத்தையும் தேசபக்தியையும் நாம் நிதானிக்கவேண்டும். ஒகஸ்ட் தீர்மானம் நிறைவேறிய பிறகு இந்த மூன்றுவருஷ காலமாகச் சுதந்திரத்தில் தனக்குள்ள ஆர்வத்தைக் காட்டிக்கொள்வதை விட்டுவிட்டு முஸ்லீம் லீக் ஒகஸ்ட் தீர்மானத்தை எதிர்ப்பதில்தான் முனைந்திருந்தது. சுதந்திரப் போரில் கலந்துகொண்டவர்களும், சிறை சென்றவர்களும், அரசினரின் அடக்குமுறைக்கு ஆளாகி உயிர் துறந்தவர்களும், முஸ்லீம் லீக்கின் பாகிஸ்தான் திட்டத்திற்கும் முஸ்லீம் மக்களின் விரோதமானவர்கள் என்று லீக்கர்கள் கூறினர்கள்.

### லீக் செய்தது என்ன?

"அவர்கள் மீண்டும் ஒருமுறை ஒகஸ்ட் தீர்மானத்தைப் படித்து அதிலடங்கியுள்ள உட்கருத்துக்களை விளங்கிக் கொள்ளட்டும். பாகிஸ்தான் திட்டத்தை ஒப்புக்கொண்டுவிட்டாலும்கூடச் சுதந்திரத்தை அடிப்படையாக் கொண்டு காங்கிரசுடன் ஒரு ஒப்பந்தத்துக்கு வரவேண்டுமென்று லீக்கர்களுக்குச் சிரத்தைகிடையாது. நான்கூறுவது இதுதான்: 'பாகிஸ்தான் வேண்டுமென்றல் தாராளமாக எடுத்துக்கொள்ளுங்கள். உங்களுடைய லட்சியம் புனிதமானது என்று நீங்கள் கருதினல் அதற்காகத் தியாகம்செய்து போராடி அதை நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள்'. கடந்த மூன்று வருஷங்களிற் பிரமாதமாக நெருப்பைக் கக்குவதைப்போல் பிரசங்கம் செய்வதைத்தவிர லீக்கர்கள் தங்கள் லட்சியத்தையடைய உருப்படியான ஒரு காரியத்தையும் செய்யவில்லை. பொலீசார் காங்கிரஸ்காரர்களைக் கைது செய்துகொண்டும் வேட்டையாடிக்கொண்டும் இருந்தபோது, லீக்கர்கள் பாகிஸ்தானை ஒப்புக்கொள்ளாவிட்டால் விபரீதங்கள் விளையுமென்றுஉருட்டிக் கொண்டு இருந்தார்கள்.

"இந்தியாவின் சுதந்திர லட்சியத்திற்காகவும், 40 கோடி இந்திய மக்களின் கதி மோட்சத்திற்காகவும் எந்தக் கட்சி இடைவிடாது பாடுபட்டு வந்திருக்கிறது என்பது, காங்கிரசின் சுதந்திரப் போராட்டத்தின் சென்ற 25 வருஷ சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் தெரியவரும். காங்கிரஸ் போராடிப் பெறும் சுதந்திரம் ஏதோ ஒரு கட்சிக்கோ அல்லது மதத்தினருக்கோ இல்லாமல் தேசம் முழுவதுக்கும் சேர்ந்து பெறுவதாகத்தானிருக்கும்.

### அவமதித்தனர்

"எல்லா இந்திய மக்களின் நன்மைக்காகவும் தான் சுதந்திரம் வேண்டுமென்று காங்கிரஸ் போராடுகிறது. முஸ்லிம்கள்மீது ஹிந்துக்கள் ஆதிக்கம் செலுத்துவதென்பது சாத்தியமேயில்லை. பார்க்கப்போனல், எந்த ஜாதியும் மற்றொரு ஜாதியின் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது. முஸ்லிம் லீக்கை அணுகி ஒருசமரச ஏற்பாட்டைச் செய்துகொள்ள எங்களாலான வரையில் முயற்சி செய்தோம். நாங்கள் லீக் தலைவர்களிடம் சென்றபொழுதெல்லாம், அவர்கள் எங்களை அவமதித்ததே யல்லாமல் ஏற்றுக்கொள்ள முடியாத கோரிக்கைகளை யெல்லாம் கூறி ஒப்புக்கொள்ளும்படிகேட்டனர். ஆகையால், இந்தியாவின் சுதந்திரத்தைப்பற்றி முஸ்லிம் லீக் சிறிது கூட அக்கறை கொள்ளவில்லை. என்ற முடிவுக்கு நாங்கள் வந்துவிட்டோம். * *

பிரிட்டிஷார் நமது நாட்டை ஒழித்த அதே நிமிஷத்தில் நமது தொல்லைகளுக் கெல்லாம் பரிகாரம் கிடைத்துவிடும் என்று காங்கிரஸ் முடிவுக்கு வந்திருக்கிறது.

### என்ன ஏற்படும்

"அன்னிய ஆட்சி இந்த நாட்டிலிருந்து ஒழிந்தால், நமது

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கர்ண பரம்பரை

● கொண்டோடி ●

● வடஇலங்கை யென்ருல் என்னவென்று உங்களுக்குத் தெரியுந்தானே!

✲ எல்லோருக்கும் தெரியும்; யாழ்ப்பாணந் தானும்.

✲ சும்மா இருங்கோ யாழ்ப்பாணமில்லை; காங்கேசன்துறையாம்.

● அங்கேயொரு சிமேந்துச்சாலை தொடங்கப் போகிருர்களாம்

✲ இந்தச்சாலையைத் தொடங்கவேண்டுமென்று மார்ச் மாதம் 20-ந் திகதி அரசாங்கசபை ரூபா 50,000 கடன்நிதியிலிருந்து எடுக்கும்படி தீர்மானித்ததாம்.

✲ இந்தக் காசு எதற்கென்று எணணுகிறீர்கள்?

● ஒரு கைபடிந்த ஆசாமி வந்து சிமேந்து செய்யலாமா என்று பார்க்கிறதற்கு.

✲ திரு. ஹென்றி பூலி என்ருெரு கைதேர்ந்த ஆசாமி வந்து காங்கேசன்துறையைத் தான் தேர்ந்தெடுத்தாராம்.

✲ இன்னுமொரு புதினம் தெரியுமா உங்களுக்கு?

● 1938-ம் ஆண்டு வரை இந்தியாவிலிருந்து சிமேந்து இலங்கைக்கு அதிகமாக வரவில்லை.

✲ குள்ள ஜப்பானியரே, சிமேந்து எங்களுக்கு அனுப்பி வந்தார்கள்.

✲ 45,000 தொன் சிமேந்தை ரூபா 90,0,000 துக்கு அனுப்பி வந்தார்களாம்.

✲ இங்கிலாந்தும் சும்மா இருக்கவில்லையாம்.

✲ இவர்களும் 31, 500 தொன் அனுப்பினுர்களாம் ரூபா 8,84, 000 க்கு.

● ஆனல் இனிமேல் எங்களுக்குப் பயமில்லையாம்.

✲ மலாய்ப் பகுதியிலிருந்து பணம் நிரம்ப வருமாம்.

✲ யாழ்ப்பாணமெல்லாம் கல் வீடுகளாகக்கிளம்ப போகிறதாம்

● இந்த ஸோல்பரி அறிக்கையைப்பற்றி உங்களது உண்மையான யோசனை என்ன?

✲ ஜி.ஜி. பாடு எப்படியென்று எல்லோரும் ஒருவிதமாக அறிந்துவிட்டார்களாம்.

✲ ஜி. ஜி. இனிமேலாவது சிங்களவருடன் ஒத்துழைப்பார் என்று சில பேர் எண்ணுகிருர்களாம்.

● என்னுடைய உற்ற சினேகிதன் ஒருவன் வேறேதோ கதை சொல்லுகிருன்.

● ஜி. ஜி. இங்கிலாந்திலேயே இருக்கப்போகிருராம்.

✲ இதை நீங்கள் நம்புகிறீர்களா?

● தஹநாயக்காவைத் தானே எல்லோருக்கும் தெரியுமாம்.

✲ அவர் ஒரு புதிய விளையாட்டுச் செய்திருக்கிருர்.

✲ இலங்கையில் · கருணை கூரும் இங்கிலாந்திலிருக்கும் சிலருக்குக் கடிதம் எழுதியிருக்கிருராம்.

✲ அரசாங்கசபையைக் கலைக்க வேண்டுமாம்.

✲ திரும்பவும் ஒரு தேர்தல் நடத்த வேண்டுமாம்.

✲ இங்கிலாந்தி லுள்ளவர்கள் இதைப் பொன்னம்பலத்திற்குக் காட்டினுல் என்ன செய்வது?

● பிந்திய செய்தி: இதையும் நம்புகிறீர்களா?

✲ நடேசனுக்கும், தியாகராஜாவுக்கும் ராஜகுலேந்திரனுக்கும் மாருக எதிர்நடவடிக்கை எடுக்கப் போகிருர்களாம்;, அகில இலங்கைத் தமிழ் கொங்கிரஸ்.

✲ 'டைம்ஸ்' பத்திரிகையைப் போலே புத்தியாக நடந்துகொண்டாலென்ன இந்தக் கொங்கிரஸ்.

● தமிழிலும் சிங்களத்திலும் அரசாங்க வேலைகள் நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பட்டினசங்கத்துக்கு விருப்பமில்லையாம். சபாபதியொருவரே தமிழில் வேண்டுமென்று தமிழிற் பேசினுராம்.

✲ தமிழ் சரியாகத் தெரியாவிட்டால் ஏன் இந்தப்பாடு.

✲ தோட்டவேலை செய்தாலென்னவாம்.

● தமிழ் நன்ருகக் பயின்றவர்கள், அரசாங்க வேலைகளைப் பார்த்தாலென்ன?

### 188-வது இலக்க ஜவுளிக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

**பர்மா பீஸெஸ்**

பர்மாப் பீசுகளின் கூப்பன் மதிப்பைக் குறைத்தது சம்பந்தமாக (175-வது ஜவுளிக் கட்டுப்பாட்டு அறிவித்தலைப் பார்க்கவும்) வியாபாரிகளும் இறக்குமதியாளரும் இதனுல் அறிய வேண்டிய தென்னவென்ருல், இவ்வாறு குறைக்கப்பட்டது 1945-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 24-ந் திகதி இத்தீவில் இருந்த மேற்படி பொருளுக்கு மாத்திரம் உரியது,

ஒக்ரோபர் மாதம் 24-ந் திகதிக்குப் பின் இறக்குமதியாக்கப்பட்ட பர்மா பீசு இலங்கைக்கு அனுப்பப்படும் பருத்திப் புடவைக் கோட்டாவுக்குள் அடங்கியிருந்தால் மற்றப் புடவைகளுக்குரிய விகிதமாகவே கூப்பன் புள்ளி மதிப்பு உடையது.

ஈ. ரெட்றிக்கோ
ஜவுளிக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 7-11-45 [2535]

### 191-வது ஜவுளிக் கட்டுப்பாட்டறிவித்தல்

இறக்குமதி இடாப்புகள்

இறக்குமதியாளரின் இறக்குமதி இடாப்பிலுள்ள ஒவ்வொரு பதிவும் உதவி ஜவுளிக் கட்டுப்பாட்டதிகாரி (பங்கீடு) யால் மேற்படி பதிவுடன் சம்பந்தப்பட்டதாகக் கொடுக்கப்பட்ட பற்று அல்லது வரவுக் குறிப்பை ஆதாரமாகக் கொண்டிருக்க வேண்டும். அவ்வகையான குறிப்பைப் பெறும்வரையும் அல்லது பெற்றுக்கொண்டாலன்றி ஓர் பதிவும் செய்தல் கூடாது. உதவி ஜவுளிக் கட்டுப்பாட்டதிகாரி(பங்கீடு) யிடம் இருந்து பற்று அல்லது வரவுக் குறிப்புப் பெற்றுக்கொண்டதும் உடனுக்குடனே இறக்குமதியாளன் தானே அதற்குப் பொருத்தமான பதிவை இடாப்பில் பதிய வேண்டும்.

2. எல்லா வியாபாரிகளும் உதவி ஜவுளிக் கட்டுப்பாட்டதிகாரி (ப'ங்கீடு)யிடம் இருந்து பெற்றுக்கொண்ட பற்றுவரவுக் குறிப்புகளை தங்கள் இறக்குமதி இடாப்புகளிற் செய்துகொண்ட அததற்குரிய பதிவுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து வேண்டிய திருத்தங்களைச் செய்ய வேண்டும்.

3. இவ் அறிவித்தலில் உள்ள விளக்கங்கள் சமீபத்தில் புதுக்கப்பட்ட கூப்பன் பெறுமதி காரணமாக ஏற்பட்ட மாறுதல்களை திருத்துவதற்கும் உரியன. அதாவது உதவி ஜவுளிக் கட்டுப்பாட்டதிகாரி (பங்கீடு) யிடமிருந்து வரவுக் குறிப்பைப் பெற்றுக்கொண்டாலன்றி அவ்வகையான திருத்தங்கள் செய்தல்கூடாது.

4. மேற்படி விளக்கங்களை முன்னிட்டு 23-வது ஜவுளிக் கட்டுப்பாட்டுக் கட்டளையின் 3-வது பந்தியின் கடைசி வசனத்தில் வேண்டப்படுவன இறக்குமதியாளரைப் பொறுத்தவரை இதனுல் ரத்துச் செய்யப்படுகிறது.

ஈ. ரெட்றிக்கோ
ஜவுளிக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு 9-11-45 [2540]


**பதிவுசெய்துகொள்ளுங்கள்**

சிங்கப்பூர், பினுங், றங்கூன் முதலிய பிறதேசங்களுக்கு போக்குவரத்துத் தடை நீங்கியவுடன் நீங்கள் முன்போலப் பலவசதிகளுடன் பிரயாணஞ் செய்ய விரும்புகிறீர்களா?

உடனே உங்கள் பெயரைப் பதிவுசெய்யுங்கள்

எஸ். ஆர். எஸ். நாதன்
73, மாட்டின் ரோட்
(றெயில்வே ஸ்டேசன் ரோட்)
[2514] யாழ்ப்பாணம்.


### ஜாவா செல்ல நேருஜிக்கு அனுமதி மறுப்பு

ஜாவாவிவ் இன்று இருந்துவரும் கொந்தளிப்பை உத்தேசித்து இந்தோனீஷியாவுக்கு பண்டித ஜவஹர்லால் நேரு செல்வதற்கான போக்குவரத்து வசதி செய்துகொடுப்பது மறுக்கப்பட்டிருக்கிறது. நேசதேச பிரதம தளபதியோடு கலந்து [illegible] டிவுக்கு அரசாங்கம் வந்திருக்கிறது.


# புகையிலை

புகையிலைப்பயிர் செய்வோர்க்கு — ஓர் விசேஷ அறிவித்தல்

கொழும்பு
கொம்மேர்ஷல் கம்பெனியார்

அநேக வருஷங்களாக எல்லாப் பயிர்களுக்கும் வேண்டிய பசளைவகைகளை விநியோகஞ் செய்பவர்களாக இருந்து வருகிருர்கள்

புகையிலைப் பயிர்ச் செய்கைக்கு அவசியமான பசளைகளைப்பற்றி விசேஷமாக அறிந்தவர்கள்

C. C. C.

பிரத்தியேக புகையிலைப் பசளைக் கலப்புகளை உபயோகிப்பதாலேயே சிறந்த செழிப்பையும் மிக உயர்ந்தலாபத்தையும் பெறமுடியும்

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்

கொழும்பு
கொம்மேர்ஷல் கம்பெனி லிமிற்றெட்
(பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டது)
(அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது)

COLOMBO
COMMERCIAL CO., LTD.

Incorporated in Great Britain.
Liability of Members Ltd.

[2507]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலும் காமமும்

நாவற்குழியூர் நடராஜன்

'காதல் சிறந்தது — தெய்வீகமானது' என்ற ஒரு எண்ணம் எங்கிருந்தோ நம்மிடையே அதி தீவிரமாகப் பரவி வருகிறது.

எந்த ஒரு விஷயமாயினும் சரி, அது நமக்குப் பிடித்துக் கொள்வதற்கும் பிடிக்காமற் போவதற்கும் நம் மனப்பான்மையே முக்கிய காரணமாகிறது.

'காதல்' என்றதும், மதி மயங்குந் தன்மை மனித சுபாவமாகிவிட்டது. ஒருத்தியின் (ஒருவனின்) காதலுக்காக—ஏன்! கடைக்கண் பார்வைக்காக—ஏங்கித் தவிக்கும் மனிதப் பிறவிகள், 'காதல்' என்ற சொல்லுக்குத் தெய்வீகத் தன்மையை ஏற்ற ஏன் தயங்கப் போகிறார்கள்? அது அவர்கள் மனத்துக்கும் பண்புக்கும் முதல்தரமான விஷயந்தானே!

நாகரிகமான முறையில் ஒருவனுக்கும் ஒருத்திக்கும் ஏற்படுந் தொடர்பு காதலாகிறது. ஏதாவது கொஞ்சம் அநாகரிக—அதாவது இயல்பான—முறையிலே தொடர்பு ஏற்பட்டால், அது காமமாகி விடுகிறது இந்த உலகத்தின் கண்களிலே. இன்றைய காதலின் அடிப்படை இந்த நாகரிக. உலகம் பழிக்கும் காமந்தானே! அதிலிருந்து எழுந்த காதல் எப்படிச் சிறந்ததாகவோ தெய்வீகமானதாகவோ இருக்க முடியும்? அதெல்லாம் அதையதை எடுத்தாள்பவரின் மனப்பான்மையை அப்படியே சித்திரித்துக் காட்டும் பளிங்கறை போன்ற பதங்களே.

காதலுக்கும் காமத்துக்குமுள்ள வித்தியாசம், ஆங்கிலத்தில் 'பிளான்ரர்' (planter) என்ற சொல்லுக்கும் 'பாமர்' (farmer) என்ற பதத்துக்குமுள்ள பேதமளவுதான். இவ்விரு வார்த்தைகளும் 'கமக்காரன்' என்ற ஒரே பொருளையே உடையன. ஆயின், ஒன்று நாகரிகமானது, மற்றது நாகரிகமானதல்ல. அவ்வளவுதான் அவற்றின வேறுபாடு.

காதலும் காமமும் இரண்டல்ல என்பது, பழந்தமிழ் நூல்களிற் காமம் என்ற பதமே யன்றிக் காதல் என்ற சொற்பிரயோகம் — அதிலும் இன்று அதற்கு ஏற்பட்டிருக்கும் கருத்தில்—இடம் பெறவில்லையென்பதிலிருந்தே நன்கு அறியத்தக்கதாயிருகிறது.

காதலாயிருந்தாலென்ன காமமாயிருந்தாலென்ன, அது ஒருவனின் (ஒருத்தியின்) உடலின்பத்துக்காக ஏற்படுவதொன்ருயின் வெறுக்கத் தக்கதே. அது விரைவில் அழியுந் தன்மையுடையது; ஒரு வெறும் சுயநலத் தூண்டல் அது. இத்தகைய காதலை—காமத்தை—யே இந்த அடிமை உலகத்தில் இன்று தூண்ட வேண்டாமென்கிருேம், அதற்கெல்லாம் முன்மாதிரி காட்டியவன் இராமனுயிருந்தாலென்ன. கண்ணனுயிருந்தாலென்ன.

இந்தக் காதல் — காமக் — கதைகள் இன்று நமக்கு வேண்டிய வீர உணர்ச்சியை வளரவிடாது தடை செய்கின்றன; நம் கவனத்தையெல்லாம் இலகுவில் வேறு வழியில் இழுத்து விடுகின்றன. அதனுல்தான்,

'காதல் எதற்கித்தக் காதலோ—இன்று
கண்ட தெதிலுமிக் காதலேன்?
காதல் சிறந்ததொன் ருயினும்—அன்னை
கன்றி மடிகையிற் காதலா?'

என்று கர்ச்சிக்கிருேம். ஏன்! கம்பன் கூடத்தான் சொல்லுகிருனே;

'காம மில்லெனிற் கடுங் கேடேனும்
நாம மில்லை நரகமு மில்லையே,'

என்று.

'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி......' என்ற பாவில் வரும் காதல்தான் எமக்கு வேண்டியது. அது உடற் காதலல்ல; உயிர்க்காதல்—ஆத்மீக அன்பு. அது சிறந்தது; தெய்வீகமானதுங்கூட. ஆனுல், அதையா இன்று நாம் காதல் என்று சொல்லுகிருேம்? இல்லை; ஒரு சில நாழிகைகளுக்கு ஏற்படும் உடலின்பத்துக்காக எழும் காமத் தூண்டுதலைத்தான். அது எப்படிச் சிறந்ததாக இருக்க முடியும்? வெறும் போலி வேஷம்!

ஆகவே உயிர்க் காதல் வளர்க! உடற்காதல் ஒழிக! அது நாசமாய்ப் போக! அந்தப் போலிச் சரக்கை ஏன் ஐயா இவ்வளவு தூரம் விளம்பரப்படுத்திச் சாத்தனின் தூதர்களாகிறீர்கள் என்றுதான் இங்கக் காதல்—காமக்—கதைக்காரர்களைக் கேட்கிருேம். இயற்கையின் தூண்டல் அது என்ரு சொல்லுகிறீர்கள்? மனிதனின் அற்ப குணங்கள் எல்லாமே இயற்கையின் தூண்டுதல்தானே! அது தோன்ருமலிருக்க முடியாதென்ருல், தோன்றிய இடத்திலேயே அழியட்டும்; அழியவிடுங்கள். ஏன் அதைக் காட்சிச் சாலைகளுக்குக்காவித் திரிகிறீர்கள்? உங்கள் செயல் உங்கள் இயல்பையே காட்டிக் கொடுத்துக் கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியவில்லையா என்ன?

த. தம்பித்துரை
யாழ்ப்பாணம்
ஈழகேசரி ஏஜென்ட்

சுத்தானந்த பாரதியார் வெளியீடு, சோதி நிலைய வெளியீடு, கோதைநாயகி அம்மாள் எழுதிய நூல்கள், கதைப்புத்தகங்கள், நாவல்கள், சினிமாப்பாட்டுப் புத்தகங்கள் புதினப் பத்திரிகைகள்முதலியன எம்மிடம் கிடைக்கும்.

தலைமை நிலையம்:
கச்சேரியடி,
யாழ்ப்பாணம்.

கிளை:
பெரியகடை,
யாழ்ப்பாணம்.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!

சுதேச வைத்தியத் திரட்டு.

என்னும்

சிறந்த வைத்திய நூல்

இதில் இலங்கையிலுள்ள வைத்தியர்களின் கையாட்சியிலுள்ள அவுடதங்களாவன:

குளிகைவகை, சூரண பற்பவகை, எண்ணெய் தைலவகை, நெய்வகை, லேகியவகை, குழம்புவகை என்பன.

வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ லங்கா புத்தகசாலை, வண்ணூர்பண்ணை, யாழ்ப்பாணம்

[2537]

# வீர — சர்தார்

சர்தா வல்லபாய் படேலுக்கு ஒக்டோபர் 31-ந் தேதியுடன் எழுபதாண்டு முடிவுற்றது. குஜராத்தின் ஸர்தாராகவன்றி இந்தியாவின் சர்தாராக அவரை இந்தியமக்கள் மதிக்கிருர்கள். இப்படிப்பட்ட சர்தாரைப் பற்றிக் கொஞ்சம் அறிந்து கொள்வது நல்லதல்லவா?

சர்தார் புகழ் பர்டோலி சத்தியாக்கிரக காலத்தில் மிகவும் பரம்பிற்று. அக்காலத்தில் அவர் எண்பதிஞயிரம் மக்களை அணிவகுத்து அரசாங்கத்துடன்போர்நடத்தினுர்

காங்கிரஸ் சட்டசபைப் பிரவேசத்தை மேற்கொண்ட காலத்தில் அதைத் தலைமையேற்றுத் திறம்பட நடத்தியவரும் இவர்தான். அவரது கட்டுப்பாடும் திடமான முடிவுகளும் கண்டிப்பும்தான் ஏகாதிபத்தியம் பிரமிக்கும் வண்ணம் எல்லா மாகாணங்களிலும் காங்கிரஸ் மந்திரிசபை அமைத்து ஆட்சிபுரிய உதவிற்று.

காந்திஜியின் சாம்ராஜ்யத்தில் சர்தார் ஒரு பிரதானி. காந்திஜியினுற்சிருட்டிக்கப்பட்டு, பாரத தேசமெங்கும் இயங்கும் பல்வேறு ஸ்தாபனங்களில், அரசியர்பல மிக்க காங்கிரஸ் ஸ்தாபனத்தின் தலைவர் இவர். அரசியல் விஷயமாக காந்திஜீ வகுக்கும் திட்டங்களை இவர் வகுக்கிருர். போர் முறைகளையும்கூறி லக்ஷியத்தையும்காட்டிவிடுகிருர். அவர்போட்ட திட்டங்களை அப்படியே நடத்தி வெற்றிபெறச் செய்யும் வன்மை படைத்தவர் இந்த ஸர்தார்தான்.

தொழிலாளர் சட்டம் நிறைவேறியபோது அதைக் கொம்யூனிஸ்டுகள் எதிர்த்து ஆர்ப்பாட்டம்செய்தனர். ஸர்தார் தொழிலாளர் வசிக்குமிடத்தைத் தாண்டிச் சென்ருர். கோபங்கொண்ட தொழிலாளி ஒருவன் படேல் சென்றுகொண்டிருந்த காரை, ஒரு பெரிய கடற்பாரை கொண்டு தாக்கினுன். கண்ணுடி நொறுங்கிற்று. ஆனுலும் அது உடைந்து விழாத இயல்புடைய கண்ணுடியானபடியால் சிதறவில்லை. ஸர்தார் ஒன்றும் நடக்காததுபோலக் காரைச் செலுத்தச் சொன்னுர்.

ஸர்தார் சிறந்த ராஜதந்திரி. பொதுவாழ்வில் மிகவும் கண்டிப்பானவர். ஆனுல் நெருங்கிப் பழகினுல், அவர் அன்பு நிறைந்தவர். தயாளமான ஹாஸ்யப் பிரியர் என்பது தெரியும். எதிரிகளிடமும் அன்பு செலுத்தி லக்ஷீபத்தையடையும் வன்மை படைத்தவர்.

காரியத்திற் போலவே பேச்சிலும் தீரம் மிகுந்தவர். எதிரியைக் கிண்டல் செய்து மடக்குவதிலும், தர்க்கத்தினுற் பணியவைப்பதிலும் சயர்த்தர். ராஜகோட்டைசத்தியாக்கிரக சமையத்தில் ஒரு சிற்றரசர், படேலுடன் பேசிக்கொண்டிருக்கையில், ராஜ்யத்தைக் காப்பாற்றத் தமது முன்னுேர் எத்தனையோ சமயங்களில் எதிரிகளுடன் ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிருர்களெனப் பெருமையோடு குறிப்பிட்டார்; சட்டென்று படேல், "ஆமாம், மொகலாயர் காலத்திலும் ராஜ்யத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக உங்கள் புதல்விகளை மொகலாயர்கட்குக் கொடுத்துச் சம்பந்தம் செய்தவர்களல்லவா" என்ருர்.

எழுபது வயது நிரம்பினுலும் வாலிபத் தன்மையும் உறுதியும் வாய்ந்தவர். ஒரு போர்வீரனிடம் உள்ள எதற்கும் தயாராகவுள்ள குணத்தையும், ஒரு வாலிபனிடமுள்ள உத்வேகத்தையும் ஒருங்கே பெற்றவர்.

சர்தாரிடம் தன்னலமென்பதே கிடையாது. அன்னையின் அன்பும் அருளும் நிறைந்தவர். அன்னையின் கண்டிப்பை ஒத்த கண்டிப்புடையவர். அவருக்குப் பேச்சுப் பீடிகையும் பிடிக்கா. ஆனுல் சமீபத்தில் பம்பாயில் நடந்த காரியக் கமிட்டிக் கூட்டத்தில் அவர்பேசிய பேச்சு இந்திய மக்களனைவரையும் கலக்கி விட்டது. "இந்தியாவைவிட்டு வெளியேறு" என்ற சரித்திரப் பிரசித்திபெற்ற வாக்கியத்தை 'ஆசியாவைவிட்டு வெளியேறு' என்று மாற்றியிருக்கிருர். இந்த வாக்கியந்தான் கீழ்த் திசையிலுள்ள மக்களைத் தட்டி எழுப்பியிருக்கிறதென்று சொன்னுல் அது மிகையாகுமா?

## கண்கண்ட தெய்வம்

(க. திருநாவுக்கரசு)

உயிர்க்கிலை உருவம் உருவங் கண்டென
மதலையை யீன்று வடிவங் கண்டாள்
கண்டா ளொன்றைக் கடவுளை நேர்வாள்
பெற்ற அருமையின் பெற்றி நோக்கி
வளர்வுறு நிதியை மடியிற் காண்குவள்
கட்டிக் கனியைக் கையி னேந்துவள்
அன்பி னூறும் அமுதப் பாலை
இன்பி னூட்டி எய்துவ ளின்பம்
கந்த மொன்ருே கண்டது நாசி
உயிரையு மோந்தனள் ஒண்முக் கார
உண்மை யன்பி லொளிர்பூந் தெய்வம்
அன்னை யன்றி மற்றியா ருளரே.

# 3-வது உலகமகாயுத்தத்துக்கு ஆயத்தங்கள்

சேர் எஸ். ராதாகிருஷ்ணன்

யுத்தம் நடக்கும்பொழுது அரசியல் வாதிகள் யாவரும் "மனிதனுக்குச் சுதந்திரம் வேண்டும்". "சிறிய நாடுகள் சுயராஜ்யத்தைப் பெறவேண்டும்" என்று கூச்சலிட்டவண்ணமாக இருக்கக் காண்கின்ருேம். ஆனுல் யுத்தம் முடிவடைந்தவுடன் எல்லாரும் உயரிய நோக்கங்களையும் கொள்கைகளையும் கைவிட்டுப் பழையபடி சுயநலத்தை மேற்கொண்டு பொய் நிறையப்பெற்ற இராசதந்திர முறைகளைக் கையாள முற்படுகின்றனர்.

பழைய அனுபவங்களைப் பெற்று இராசதந்திரிகள் முன்னர் அமைக்கப்பெற்று அபஜெயமடைந்த சர்வதேச சங்கத்திலுள்ள குறைகளை நன்குணர்ந்து பெருநன்மை பயக்கக்கூடியதாக இப்பொழுது 'ஒற்றுமை பெற்ற வல்லரசினரின் சாசனம்" (The United Nations' Charter) நிறுவப்பட்டது. பழைய சர்வதேச சங்கத்தில் ருஷியாவும்அமெரிக்காவும் சேரவில்லை. ஆனுல் இப்பொழுது அமைக்கப்பட்ட சங்கத்தில் ஜெர்மனியும யப்பானும் சேர்க்கப்படவில்லை. ஆங்கிலேயரும் பிரான்ஸியரும் அப்பொழுது மிக்க அதிகாரத்தைப் பெற்றிருந்தனர். அவரின் பிழையான இராசதந்திரத்தின் பயனுக்க சர்வாதிகாரிகளும் சர்வதேச சங்கத்தில் ஸ்தானம் பெறலாயினர். இரண்டாவது மகா யுத்தத்துக்குச் சர்வாதிகார அரசியலையுடைய ஜெர்மனியரே காரணராயினும், ஓரளவுக்குப் பிரான்ஸியரும் பிரிட்டிஷாரும் அதற்குப் பொறுப்புடையரென்றுஞ் சொல்லவேண்டியிருக்கின்றது.

பறக்கும் குண்டுகளை ஜெர்மனியர் இங்கிலாந்தின்மீது உபயோகித்தபொழுது பிரிட்டிஷார் இதை மிக உக்கிரமாகக் கண்டித்தனர். சர்வதேச சட்டங்கட்கு விரோதமென்றனர். யுத்தவீரர் சாமானிய பொதுமக்கள் என்போரை வித்தியாசமின்றி அழிவு செய்வது பெருந் துரோகமென்றனர். ஆனுல் மிகத் திருந்தியநாகரிகமுடையராகத் தம்மை மதிக்கும் பிரிட்டிஷார் அமெரிக்கர்என்போர் அணுப்பிரளயக் குண்டினை உபயோகித்தாரே. இவர்கள் வாய்ப்பேச்சு விருதாவாய் முடிந்தது. இக்குண்டினை ஜெர்மனியராவது ஜப்பானியராவது கண்டுபிடித்திருப்பின் மிகத் திறமையாக உபயோகித்துப் பெரு நட்டத்தை விளைத்திருப்பாரென திரு. சேர்ச்சில் கூறுகின்ருர். இதில் நாமறியக்கூடியது யாது? நேசவல்லரசினர் இச்சர்வாதிகாரிகளிலும் சிறிதாயினும் சிறந்தவரல்லரென்பதே. நேச வல்லரசினரின் வெற்றி சன்மார்க்கம், நேர்மை என்பன உயர்ச்சி அடைந்தமைக்கு அறிகுறியாகாது. உபாயத்தாலும், பலாத்காரத்தாலும், விஞ்ஞான சாத்திர வன்மையாலும் அடைந்த வெற்றியாகவேயிருக்கின்றது

அறிவாற்றலில் மிக்க வன்மை பெற்ற ஜெர்மனியரையும் ஜப்பானியரையும அந்தரமான நடுக்காட்டில் விட்டுவிடுவது புத்தியாகாது. அப்படிச் செய்யின் அவர்கள் சிந்தையில் பழிவாங்கும் குணம் மேன்மேலும் உறுதியடைந்தேயிருக்கும். "உலகப் பாதுகாப்புச் சங்கத்தில்" (The World Security Council) அங்கத்துவம் பெறுவோர் தாம்பெற்ற வெற்றியின் பேருக இறுமாப்படைந்த வல்லரசினரே. மற்றவர்கட்கு அதில் இடமில்லை. சனத்தொகை, கலாசாரம், பழைய பெருமை என்பவற்றை நோக்குமிடத்து இந்தியாவும் அச்சங்கத்தில ஓர் ஸ்தானம் நிச்சயம் பெறவேண்டும்.

தாம் பாதுகாவலர் என்று சொல்லிக்கொண்டு பழைய ஏகாதிபத்திய நாடுகளை இன்னுந் தமது ஆதிக்கத்துள் வைத்துக்கொள்ள முயல்கின்றர். இப்பொழுது இந்தோசீனம், கீழ் இந்திய தீவுகள், பர்மா, இலங்கைமுதலிய நாடுகளில் கிளர்ச்சிகள் ஆரம்பித்துள்ளன. இச்சுதந்திரக் கிளர்ச்சிகளை அடக்கித் தமது ஆதிக்கத்துள் வைத்திருக்க எண்ணுவதுடன் நில்லாது வசதி கிடைத்தால் புதிய நாடுகளையும் சேர்த்துக் கொள்ளப் பார்க்கின்றனர். மகா யுத்தத்தில் பெற்ற வெற்றியின் பேறு யாவதும் தூசியாக மாறுகின்றது.

சுதந்திரமின்றி இருக்கும் நாடுகள் விடுதலையடைய வேண்டும். அவர்களுக்கு உதவி அல்லது வழி காட்டுவது அவசியமாயின் அதனை ஒரு நாடு மாத்திரம் செய்ய வேண்டியதில்லை. சர்வசாதியினரின் சங்கமே (The United Nations) செய்யும் உரிமையுடையது. இப்படிச் செய்தாற்ருன் இனிமேல் உலக யுத்தம் ஆரம்பிக்க இடம் வராது.

உலக இராசதந்திரிகள் முன்விட்ட பிழைகளையுணர்ந்து தாழ்மையுடன் அகங்காரமின்றி உலக சமாதானத்தை நிலைநாட்ட வழிவகைகளை அனுட்டிக்க வேண்டும். எல்லாச் சாதியினரும் நீதியைப் பெற்று விடுதலையடைந்து சுதந்திரமாக வாழ வசதிபெற வேண்டும். இவ்விதமான நிலையேற்படாவிடின் மூன்ருவது உலக மகா யுத்தம் விரைவில் ஏற்படுங் காலம் எட்டத்திலில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழகேசரி

சுன்னுகம்: பார்த். கார்த்தி. ௩

## புதிய அரசியற் றிட்டம்

**ஸோ**ல்பரி விசாரணைச் சபையினர் பிரேரித்த திருத்தங்கள்,—அரசாங்க சபையினரால் அங்கீகரிப்பட்டன. பல குறைகள் இத்திட்டத்தில் உளவாயினும், பொறுப்பாட்சியைக் காலகதியில் இலங்கை மக்கள் பெறுவதற்கு இத்திட்டம் பெரிதும் உபயோகமாகவிருப்பதை நாம் அங்கீகரிக்க வேண்டும். அரசாங்க சபையினர் பெரும்பான்மை அங்கத்தினருடைய சம்மதத்துடன் ஏற்றதல்ல இங்கு வியப்பினைத் தருவது. சிறுபான்மைக் கட்சியினரும் மிக ஆதரவாக முன்வந்து இதனை ஏற்கலாயினர் என்பது யாவர்க்கும் மிக்க உவகையை விளைப்பதாகும். இவர்கள் இப்படிச் செய்வாரென முன் எவரும் எதிர்பார்த்ததில்லை. அவசியமின்றி வாதாடி இலங்கையின் முன்னேற்றத்தைப் பின்போடச் செய்யாது, உசாத்துணையாக நின்று துணிவுடன் திட்டத்தை இவர்கள் ஆதரித்தமை புகழப்படவேண்டியதொன்றுகும்.

சிறுபான்மைக் கட்சியினரின் தலைவர் இலங்கையில் மாத்திரமன்றி, லண்டன் சென்றும் தமது பிற்போக்கான கோரிக்கைகளை முனைந்து நின்று எடுத்துக்காட்டி வாதாடினர். இவருடைய எண்ணங்கட்கு இடங்கொடுப்பின், இலங்கைமக்கள் இதுவரையும் அடைந்து வந்த சிலாக்கியங்கள் அவமாகுமென்றும், இனியடைய விருக்கும் பெருநன்மைகள் தடைப்படுமென்றும் ஸோல்பரி விசாரணைச் சபையினர் மிகத்தெளிவாக எடுத்துக்காட்டிச் சனநாயக முறையில் இலங்கை முன்னேற்றமடையக் கூடியவாறு புதிய வோர்திட்டத்தை வகுத்தனர். இதற்காக இலங்கைமக்கள் அவர்கட்கு மிகக் கடமைப்பட்டவராயிருக்கவேண்டும். டொனமூர் விசாரணைச் சபையினர்போல் இப்போதைய விசாரணைக் கர்த்தாக்களும் வகுப்புவாதத்துக்குச் சாமணி யடித்து விட்டனர். இந்தக்கொடிய பசாசு மறுபடி உயிர்த்தெழுவதை இலங்காதேவியின் உண்மையான மீட்சியை விரும்பும் எவரும் விரும்பமாட்டார். இப்பொழுது தான் வகுப்புவாதத்தைப் பெரிதும் அவாவி நின்ற சிறுபான்மைத் தலைவர்கள், உண்மையை உணர்வாராயினர்.

**இ**லங்கையிலுள்ள பல்வேறு வகுப்பினரும் — கட்சியினரும் பரஸ்பரம் நம்பிக்கைவைத்து நடக்கவேண்டுமென்பதை இப்போதுதான் அறிந்தார் போலும்! பிரிட்டிஷ் அரசினரின் மனப்பான்மையே இவர்களின் மனமாற்றத்துக்குக் காரணமெனலாம். லண்டனை நோக்குவதால் இனி நன்மை கிடையாதென்றும், பல்வேறு வகுப்பினரும் தமக்கிடையிலுள்ள பிணக்குகளைத் தாமே தீர்த்துக் கொள்வதே செய்யத்தக்கதென்றும் இன்று தான் தேர்ந்தனர். பிரிட்டிஷ் அரசினரும் இலங்கையின் நற்காலத்தாற் போலும் இவ்விதமான பெருந்தன்மையான நோக்கத்தை மேற்கொண்டனர். இலங்கையிலுள்ள பிணக்குகள் நீங்கும் வரையும் உண்மைச் சுதந்திரம் அளிக்கப்படாதாகுமென்று அரசினர் அபிப்பிராயங் கூறின், மேன்மேலும் வகுப்புவாதமும் சுயநல நாட்டமும் நிச்சயமாகப் பன்மடங்கு பெருக்க மடைந்திருக்கும். இலங்கை மக்கள் வகுப்புவாதத்தில் ஆர்வங் கொள்ளாதிருக்கப் பிரிட்டிஷ் அரசினர் செய்துள்ள கைங்கர்யத்துக்கு நாம் என்றும் நன்றிபாராட்டும் கடமைப்பாடுடையோம். எவரும் நம்பியிராத அரிய முறையை, அரசினர் துணிவுடன் கையாண்டது போற்றத் தக்கதே. தொழிற்கட்சியரசினரின் வருங்காலக் கொள்கைகட்கு இது ஓர் அறிகுறியென்று கூறலாம்.

மூன்ருவது கட்சியினர் புகுந்து நின்றே, இதுவரையும் நாட்டில் ஒற்றுமை ஏற்படாதிருக்க உபாயங்களைக் கையாண்டனர். அவர்கள் தமது பழிப்புக்குரிய வேலையைக் கைவிட்டு விலகி நிற்பின், தேசமக்கள் தம்முள் இணங்கி வாழாதிருப்பதெப்படி? இலங்கையில் வாழும் சிறுபான்மை வகுப்பினர் அவசியமின்றி அச்சமடைவதும், பாதுகாப்புகள் நிரந்திரம் வேண்டுமென்று விளுவி நிற்பதும் எதற்காக? நீண்ட காலமாக அடிமையாகவாழ்ந்து வந்ததின் காரணமாகப் பெரும்பான்மை யினராகும் சிங்களர் தம்மை நசித்துவிடுவரென்று மனப்பால் குடித்து வந்தனர். இவ்விதம் எண்ணுவதற்குக் காரணம், சிறுபான்மை வகுப்பினர் தமது உண்மையான ஆற்றலில் நம்பிக்கை இல்லாமையே. எவ்வளவு சிறிய கட்சியினர் அல்லது வகுப்பினராயினும், தமது உரிமைகளைத் துணிவுடனும் நம்பிக்கையுடனும் போற்றி நிற்பின், நன்மை எய்தாது போவதெப்படி? நாம் எக்காலமும் பிரிட்டிஷாரின் துணையை நாடி நிற்பின், நமது அடிமைத்தளை நீங்குங் காலம் என்று வருமோ? பிறர் பாதுகாப்பினை நாம் எதிர்பார்க்கும் வரையில், நமக்குள் ஒற்றுமையுண்டாக இடமுண்டாகுமா? பிரிட்டிஷ் அரசினர் கைக்கொண்ட உண்மைவழி காரணமாக விரைவில் இலங்கை பெருநிலை அடையுமென்பாம்.

இலங்கையிலுள்ள எல்லா வகுப்பினரும் ஏகோபித்து நின்று அரசியற் றிட்டத்தை அங்கீகரித்தனராகவே, இதுவரையும் சிறிது அதிகாரங் காட்டி நின்ற சிங்களத் தலைவர்கள் தமதுகடமை யாதென்பதை யுணர்ந்து நடுநிலை தவருது யாவரையும் திருப்தி செய்ய முன்வர வேண்டும். சந்தேகமும் அவநம்பிக்கையும் கொண்டிருந்த சிறுபான்மை வகுப்பினரைத் திருப்தி செய்வதிலேயே ஓரளவு வகுப்பொற்றுமை தங்கியுள்ளதென்போம். இப் புதிய திட்டம் அனுசரணையில் வருங்கால், தேசமக்கட்கிடையில் நிரந்தரமான நல்லிணக்கம் ஏற்படின், அதனுல் அடையக்கூடிய பெருநன்மை சாமான்யமாகுமா? இலங்கை பூரண சுதந்திரத்தை யடைவதற்கு இதுவே அடிப்படையாகும். மேலும் சிறுபான்மை வகுப்பினர் அளவு கடந்த வாஞ்சையால் ஒவ்வாத கோரிக்கைகளைக் கிளப்பாதிருப்பது வேண்டற்பாலது. யாவரும் சம உரிமையைப் பெற்று முட்டின்றி வாழும் நிலைவந்தெய்தின், அதுவே நாடு மீட்சி யடைவதற்கு அறிகுறியாகும். எனவே, இச் சமயத்தில் புதிய அரசியற்றிட்டத்தை அங்கீகரிப்பதே முறை. அதுவிஷயமாக அவசியமின்றி மேன்மேலும் வீண் வாதங்கள் கிளப்புவதால் ஒரு பயனுமின்று. கிடைத்த சுதந்திரத்தை ஆதாரமாகக் கொண்டு, அதிக சுதந்திரத்தைப்பெற்று நம்நாடு விடுதலையடையச் செய்வதற்குஎல்லா வகுப்பினரும் சாதியினரும் தொண்டாற்றுவதே வேண்டப்படுவது.

## சீனத்துக்கு 1000 டாங்கிகள்

சீனத்தில் உள்நாட்டுக் கலகம் முற்றிவருகின்றது. கொம்யூனிஸ்டுகளும் ஷியாங்கைஷேக் படைகளும் மும்முரமாகமோதிக்கொள்ளுகின்றனர். இதற்கிடையில் அமெரிக்கா ஷியாங்கின் உதவிக்கு முன் வந்திருக்கின்றனர். சிறந்த யுத்த உபகரணங்களை உதவுவதுடன் நில்லாது அமெரிக்கா 1,000 டாங்கிகளையும் சமீபத்தில் சீனத்துக்கு அனுப்பியிருக்கின்றது.

உலக விவகாரம்

# பலஸ்தீன நெருக்கடி

### பிரிட்டன் வாக்குறுதி பிடிசாப்பர்

**பலஸ்தீனம்** ஒரு சிறிய நாடு. 1918-ம் ஆண்டுவரை அது துருக்கியின் ஒரு பகுதியாக இருந்து வந்தது. இன்று அங்கு ஒன்றரை லட்சம் மக்கள் வசிக்கின்றனர். ஆனல் இச் சின்னஞ் சிறு நாட்டில் ஏற்படும் ஒவ்வொரு விஷயமும், அது சிறிதாகவிருந்தாலென்ன பெரிய தகாரருகவிருந்தாலென்ன உலகில் வதியும் மூன்று பெரும் சாகியத்தினரைப் பாதிக்கின்றது. பிரித்தானியர், அராபியர், யூதர் ஆகிய மூன்று ஜாதியினரும் உலகிற் பற்பல பாகங்களிலும் தொடர்புடையவர்கள். எனவே, இம்மூவருக்கும் திருப்திஏற்படத்தக்க முறையில் அங்கு முளைகொள்ளும் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்வது அவ்வளவு இலேசுபட்ட காரியமல்ல. பலஸ்தீனத்தில் இப்போது ஏற்பட்டுள்ள அராபியரின் பிரச்னை பொதுவாக உலகில் வதியும் அராபியர்கள் அனைவரின் கவனத்தையும், சிறப்பாக இந்தியாவில் உள்ள ஒன்பது கோடி முஸ்லிம் மக்களின் கவனத்தையும் இழுத்திருக்கின்றது.

இன்று பிரிட்டனின் வெளிநாட்டு மந்திரி பெவின் விடுத்துள்ள அறிக்கை அரேபியாப் பிரதேசத்திலும் இந்தியாவிலுமுள்ள முஸ்லிம் மக்களுக்கு ஆத்திரத்தை மூட்டத்தான்செய்யும்.

ஐரோப்பிய யூதர் பிணக்குகள் அனைத்தையும் பரிசீலனை செய்ய ஆங்கிலேய - அமெரிக்கக் கூட்டு விசாரணைச்சபை ஒன்று அமைப்பதில் அமெரிக்கா பிரிட்டனுடன் ஒத்துழைக்குமெனவும் அச்சபை காணும் முடிவுகட்கேற்பப் பலஸ்தீன சிக்கல்கள் தீர்த்து வைக்கப் படுமெனவும் கடந்த வாரம் லண்டன் மகாமந்திரி சபையில் தெரிவிக்கப்பட்டது.

பலஸ்தீனத்தில் யூதர்கள் குடியேறுவதால் உண்டான பொருளாதார, சமூக, அரசியற் சிக்கல்களைக் குறித்த சபை விசாரணை செய்து, யூதர்களையும் கலந்தாலோசித்த பின்னர் தனது முடிபுகளை வெளியிடும். இடைக்கால ஒழுங்குகளை அமைக்கும் வரை யூதர்கள் குடியேற்றத்துக்குப் பங்கம் விளையாதென நிச்சயம்செய்து கொள்வதற்காக அராபியருடன் ஆலோசனை நிகழுமாம்.

பாலஸ்தீனம் ஒருவித தர்மகர்த்த ஆட்சிமுறையைப் பெறுமென்பது பெவின் அபிப்பிராயம்.

மகாமந்திரிசபையில் பெவின் செய்த பிரசங்கத்தில் எவ்வித புதுக் கொள்கைகளையும் காண்பதற்கில்லை. இடைக்கால ஒரு அறிக்கை போலவே அது இருக்கின்றது. 1939-ம் ஆண்டின் வெள்ளை அறிக்கை யூதர்கள் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்துகின்றது. இதைப்பற்றி ஒரு பேச்சுமூச்சே இல்லை. இவ்வறிக்கை இம்மாதத்துடன் காலாவதியாகின்ற தென்பதையும் மறந்து விடக்கூடாது. எனவே, இது நீடிக்கப்படும். அப்படியானல் அமெரிக்க — ஆங்கிலக் கோஷ்டியினர் அறிக்கை வெளிவரும்வரை பிரதிமாதமும் 1500 யூதர்கள் குடியேற்றம் நடைபெற்றுக் கொண்டே போகும்.

எப்படியிருந்தபோதிலும் அரசியல் வட்டாரங்களில் அபிப்பிராயம் வேறுவிதமாக நிலவி வருகின்றது. வெள்ளை அறிக்கையிலிருந்து சிறிதளவு மாற்றம் ஏற்படாதவிடத்தும் பலஸ்தீன விவகாரத்தில் புதிய அம்சம் புகுத்தப்பட்டிருப்பதாக அரசாங்க அதிகாரிகள் அபிப்பிராயப் படுகின்றனர். காலம் கடத்துவதற்காகவே இந்த முயற்சியோ தெரியவில்லை? இங்கிலையில் கூட்டு நடவடிக்கைதான் சிறந்ததெனக் கருதப்படுகின்றது. அமெரிக்காவின் பரிபூரண ஒத்துழைப்பு பலஸ்தீனத்தின் விஷயத்தில் வேண்டுமென்பது தொழிற்கட்சி அரசாங்கத்தின் கருத்து.

பொதுமக்கள்சபையில்பெவின் செய்த பிரசங்கத்தையும் ஆராய்வது நல்லது. நாஜிகளின் கொடூரத்தின் நிமித்தம் ஜேர்மனியில் எழுந்த யூதர் நிலைபற்றி அரசாங்கம் ஆலோசனை செய்து வந்திருக்கின்றது. ஐரோப்பாவில் நிலைமை சீர்பெறும்வரை நாஜிக்கொடுமைக்கு ஆட்பட்ட மக்களின் பிரச்னை தீராதென்பது உண்மைதான். இது துரதிர்ஷ்டமான ஒரு விஷயம். யூதர்களை ஐரோப்பிய நாடுகளிலிருந்து விரட்டிவிட வேண்டு மென்பதைப் பெவின் ஆதரிக்கவேயில்லை. யூதர்கள் சீர்பெறுவதற்கான வகையில் அரசாங்கம் முயற்சிக்கும். யூதரும் அராபியரும் சமாதானத்துடன் ஒற்றுமையாக வாழ்வதற்கானவழி வகைகளை அரசாங்கம் காண முயன்றவிடத்தும் ஒன்றும் கைகூடவில்லை.

(தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க)

# பாதை ஓரத்தில்

பாட்டைசாரி

**மந்திரி கன்னங்கராவின்** மத்திய வித்தியாசாலைகள் நாட்டிலே தோன்றியதும், ஏனைய ஆங்கிலக் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்களை அப்பள்ளிகள் மயக்கிவிட்டன. இதனுல் ஆசிரியர்கள் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது. சில பள்ளிக்கூடங்கள் மாதக்கணக்காக ஆசிரியர்கள் பலர்இல்லாமல் ஒருமாதிரிச்சமாளித்துக் கொண்டு வருகின்றன. இந்நிலை தொடர்ந்து கொண்டிருக்குமாகில் பள்ளிக்கூடங்களில் நல்ல வேலைகள் சீராக நடைபெறுவது முடியாத காரியம்.

மத்திய பாடசாலைகள் ஏற்பட்டிருப்பது நல்ல காரியந்தான். கொழும்பில் மட்டும் 12,000க்கு அதிகமான பிள்ளைகள் படிப்பு வாசனையே அறியாமல் இன்னும் இருக்கின்ருர்கள் எனத் தெரிகின்றது. இந்நிலையில் இலவசக் கல்வி ஒரு வரப்பிரசாதம் என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. ஆனல் இருந்தாற் போல் இருந்து முளை கொள்ளும் வித்தியாசாலைகள் சிறந்தகல்வியை உடனடியாக ஊட்டமுடியுமா வென்பது சந்தேகமான விஷயம்.

ஏற்கனவே யுள்ள ஆங்கிலக் கல்லூரிகளில் சட்டம்பிவேலை பார்த்தவர்கள் மத்திய வித்தியாசாலைகளுக்கு ஓட்டம்பிடித்துவிட்டனர். அங்கு இன்னும் ஒழுங்கான முறைகளில் வேலை நடைபெறுவதாகத் தெரியவில்லை.

விலகிக்கொண்ட ஆசிரியர்களின் இடங்களுக்கு ஆசிரியர்களைத் தேடிப்பிடித்து அமர்த்துவது இலேசுப்பட்ட காரியமாயில்லை. இந்த அழகில், பொதுவாக இலங்கையில் அநேக ஆங்கிலப் பள்ளிக்கூடங்களில் இப்போது பெரிய 'நெருக்கடி' நிலவி வருவதாகவே கருதவேண்டியிருக்கின்றது.

#### விலை பேசுகின்றனர்

**கலப்பு** மிஷனரிக் கோஷ்டி ஒன்று சமீபத்தில் கல்வி மந்திரியைப் பேட்டி கண்டிருக்கின்றது. தேசிய கிறிஸ்தவ சபை ஒன்று இலங்கையில் இருப்பதாகத் தெரிகின்றது. இச்சபையின் காரியதரிசிதான் அந்த மிஷனரிக் கோஷ்டிக்குத் தலைவராகச் சென்றிருக்கின்ருர். 'தேசியம்' என்ற பரிசுத்தமான பதம் இப்போது கட்டுப்பாடின்றி உபயோகிக்கப் படுகின்றது. ஏகாதிபத்தியவீரர்களும் இன்று தேசியம் பேசுகின்றனர் என்ருல் அப்புறம் எதைச் சொல்வது.

இது ஒருபுறமிருக்க: விஷயத்துக்கு வருவோம். இந்த மிஷனரிக் கோஷடி தங்கள் பரிபாலனத்தில் உள்ள ஐம்பதுக்கு அதிகமான சிங்கள, தமிழ்ப்பாடசாலைகளை அரசாங்கத்துக்கு விலைக்குக் கொடுக்கத் தயாராகியிருப்பதாக மந்திரியுடன் பேரம்பேசியிருக்கின்றது. பணங்கொடுத்து 'மதம்' பெற்றவர்கள் இப்போது பள்ளிக் கூடங்களை விலை கூறி விற்கும் நிலைக்கு வந்துவிட்டனர்.

#### மந்திரி பதில்

**இ**ந்தத் தாகர்களுக்கு மந்திரி தாராளமாகப் பதில் அளித்திருக்கின்ருர். அவர்கள் தெரிவிப்பது பொருளாதாரப் பிரச்னையைப் பொறுத்த ஒரு விஷயமாகையால் அதை நிர்வாகசபைதான் ஏற்றபோதிலும் மந்திரிசபையின் ஆசீர்வாதமும் அதற்கு வேண்டுமென்பதே கல்வி மந்திரியின் பதில். எதற்காக இவர்கள் விலை பேச வேண்டும். அரசாங்கப் பணத்தில் நடாத்திய பள்ளிக்கூடங்களைத்திரும்பவும் அரசாங்கத்திடம் ஒப்படைத்து விடுவதுதான் கிறிஸ்த தர்மமாகும். அப்படி இல்லாதுபோனல் பௌத்தர்களிடமும் இந்துக்களிடமுங்கொடுத்துத் தாரைவார்த்து விட்டாற் சரியாகிவிடுகின்றது.

#### வெள்ளைக்கார யோசனை

**சி**ங்களரை ஒரு கை பார்த்துவிட்டுத்தான் மறுகாரியத்தில் இறங்கவேண்டுமென அலறிப் புடைத்துக்கொண்டு நாசவேலை செய்துகொண்டுவந்த **டைம்ஸ்** என்ற ஆங்கிலத் தினசரி இப்போது ஐக்கிய முன்னணிக்கு ஆட்களைச் சேர்க்கின்றது. ஸ்ரீமான்கள் தியாகராஜா, நடேசன், இராஜகுலேந்திரன் என்போர் ஸோல்பெரித் திட்டத்துக்கு ஆதாவு அளித்தது புத்தி சாதுரியமான வேலை என்று சமாளிக்கின்றது. அவர்கள் கண்ணியமாக நடந்துகொண்டதுமன்றி ஏனையோருக்கு முன்மாதிரியாக நடந்துகொண்டு மிருக்கின்றனர் என்று அந்த ஆங்கிலத் தினசரி ஆரவாரஞ் செய்கின்றது. இப்படிப் புத்தியாக நடந்துகொள்வதுதான் இலங்கைக்கு நல்லதென தேசிய வாதிகள் கூறியதை வகுப்புவாதிகள் எள்ளிநகையாடினர். இப்போது அவர்கள் தங்கள் பிழையான போக்கை உணர்ந்து நாட்டின் நன்மைக்கு உழைக்க முன் வந்திருப்பதை இலங்கை மக்கள் வரவேற்க வேண்டும்.

#### சம்பளம் என்ன?

**சோ**வியத்து ருஷியாவின் சர்வாதிகாரி ஸ்டாலின், அரசியல் அரங்கத்தை விட்டு ஓய்வு எடுத்துக்கொள்ளப் போகின்ருர் என்ற செய்தி லண்டன் அரசியல் வட்டாரங்களில் அடிபடுகின்றது. அவருடைய இடத்துக்கு யார் தகுதிவாய்ந்தவர் என்ற பிரச்னையும் கிளம்பியிருக்கின்றது.

இத்தனைக்கும் ஒரு வழியுண்டு' ஸ்டாலின் வேலையைப் பார்ப்பதற்கு எவ்வளவு சம்பளம் கொடுப்பார்கள் என்று தெரிவித்தால் அநேகர் மனுப்போடத் தயாராகவிருக்கின்றனர். இங்குள்ள தோழர்களில் பலர் உத்தியோகம் இல்லாமல் இருக்கின்றனர். இந்தக் கொம்யூனிஸ்டுகளில் யாரும் ஒருவருக்கு அப்பதவி கிடைக்கலாம். எனவே மனுக்களை அழைப்பதுதான் நல்ல யோசனை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேனா முனை

"பாக்கர்"

ஒன்று சேராதவர்களைத் தமிழர்கள் நெல்லிக்காய் மூடை என்று சொல்வார்கள். வெள்ளைக்காரர் உருளைக்கிழங்கு மூடை என்று சொல்வார்கள். தமிழ் எழுத்தாளர் சம்பந்தப்பட்டவரையில் உருளைக்கிழங்குமூடை என்று சொன்னால் பொருத்தமாயிருக்குமென்று பலர் கருதுகிறார்கள்.

ஏறக்குறைய ஒன்றரை வருடத்துக்கு முன்பு கோயமுத்தூரில் தமிழ் எழுத்தாளர் மகாநாடு நடந்தது பலர் மறந்துபோயிருக்கக்கூடும். சில சம்பவங்களாவது ஞாபகத்திலிருக்கலாமென்று நினைக்கிறேன். சென்ன பட்டணத்திலிருந்து தினசரி ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கம் தலைமை வகித்ததும், சுயேச்சை எழுத்தாளர் வ. ரா. திறந்து வைத்ததும், சென்ன பட்டணத்திலிருந்து திருச்சிறுப்பள்ளி மார்க்கமாகப் பல எழுத்தாளர்கள் கோயமுத்தூருக்கு 'விசேஷ பிரயாண வசதிக'ளுடன் சென்று தமாஷ் பண்ணியதும், பின்பு பத்திரிகைகளில் 'தொடர்கதை'கள் பிரசுரமானதும்—இந்தச் சம்பவங்களாவது நம்ம சகோதரர்களின் ஞாபகத்திலில்லையா? இலங்கையிலிருந்தும் ஒரு நண்பர் அங்குபோய் இந்த மகாநாட்டுக்காகவே காத்திருந்து வைபவத்தை முடித்துக்கொண்டு திரும்பினர்.

இப்படியெல்லாம் ஆரம்ப சூரத்தவம் முடிந்த பின்னர் எழுத்தாளர்கள், அவிழ்த்து விட்ட நெல்லிக்காய் மூடை மாதிரி உருண்டு போய்த் தனித்தனியே உட்கார்ந்திருப்பதன் அர்த்தம் தெரியாமல் இப்பொழுதுதான் பல பத்திரிகைகள் விசாரணை செய்ய ஆரம்பித்திருக்கின்றன.

தமிழ்நாட்டுப் பத்திரிகைக்காரர்கள் சிலரிடையே சில பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்பட்டபோது அவர்கள் ஒரு கூட்டம் கூடி ஏதோ தீர்மானங்கள் நிறைவேற்றினர்களாம். அவை நடைமுறையில் எவ்வளவு தூரம் நிறைவெய்தியிருக்கின்றன என்பது இன்னும்தான் பலருக்குப் பரமரகஸ்யமாயிருக்கிறது. இந்த ஆர்ப்பாட்டத்தைப் பார்த்த சில கோயமுத்தூர் வாசிகள், கையில் கொஞ்சம் பணவசதியும் மில் முதலாளிகள் உதவியும் கிடைத்தவுடன் எழுத்தாளர் மகாநாடு ஒன்று கூட்ட வேண்டுமென்று ஆசைப்பட்டார்கள். நோக்கம் நல்லநோக்கம் என்பதையும், இந்த நண்பர்களின் ஆர்வமும் உற்சாகமும் யோக்கியமுள்ளது என்பதையும் எவராவது சந்தேகிக்கவில்லை.

கோயமுத்தூரில் எழுத்தாளர் மகாநாடு கூட்டினவர்கள் திடீரென்றெழுந்த ஒருஆவேசத்தைக் காண்பித்தார்களல்லாமல், இலக்கியத்துக்கோ எழுத்துக்கலைக்கோ எவ்வித காரியமும் செய்யவில்லை ஏதோ கூடினேம் விருந்துண்டோம் என்று சொல்லிவிட்டு, உபசரித்த பெருமக்களையும் வாயார வாழ்த்திவிட்டுச் சென்றதல்லாமல் இதுவரையில் என்ன நடந்திருக்கிறது? பத்திரிகைத் தொழிலாளர் மகாநாட்டில் சம்பள விகிதப் பிரச்னையும் மற்றும் பொருளாதாரப் பிரச்னையும் தீர்க்கப்பட்டதாக ஒரு கனவுத் திருப்தி ஏற்பட்டது. அதையே பின்பற்றி எழுத்தாளர் மகாநாட்டிலும் பொருளாதாரப் பிரச்னையை ஆராய்வது போல் ஆராய்ந்தார்கள். எழுத்தாளருக்குப் பணம் எப்படி வரும் என்றெல்லாம் சிந்தித்தார்கள். இன்ஷூரன்ஸ் திட்டம் வகுக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றினர்கள்.

இப்பொழுது நடந்தேறியதென்ன? கும்பகர்ணப் படலம். போன ஜூலைமாதத்திலேயே எழுத்தாளர் மகாநாடு நடந்தேறியிருக்க வேண்டுமென்று பலர் வற்புறுத்துகிறார்கள். ஆனல் அதை இயக்குபவர் யார் என்று கேட்கிறார்கள் மற்றவர்கள்! ஒருவரை மற்றவருக்குப் பிடிக்காத தமிழ் எழுத்தாளர்களிடையே பூனைக்கு மணிகட்ட யார்தான் முன்வருவார்கள்? திரு ஞானம் முதலியோர் மறுபடியும் ஆரம்பித்தால் கோயம்புத்தூர் சமாசாரம் என்று மற்றவர்கள் மௌனமாயிருப்பார்கள். திருச்சிறுப்பள்ளியார் ஆரம்பித்தால் அது 'ரேடியோ'க்காரர் பிரஜா உரிமை என்று ஒத்துழைக்க மாட்டார்கள். சென்னபட்டணத்திலும் பல கட்சிகள். தடித்தவர்கள், மெலிந்தவர்கள், வீங்கியவர்கள், அரைப்பட்டினிக்காரர், முழுப் படடினிக்காரர், காசுச்செருக்குக்கொண்டவர்கள், எழுத்துச் செருக்குக் கொண்டவர்கள், மறுமலர்ச்சிக்காரர், அருணசலம் கட்சியார், டி. கே. சி. பாவத்தினர் — என்றெல்லாம் பெரிய கட்சிகள். போதாக்குறைக்கு 'ராஜாஜி பிரச்னை' ஒன்று ஏற்பட்டு 'சும்மாகிடந்த தமிழ் நாட்டை' குழப்பியடித்துவிட்டது. அதனல் சில பத்திரிகைக் கட்சிகள் தோன்றியிருக்கின்றன. இப்படியிருக்கும்போது சென்னையில் இந்த எழுத்தாளர் மகாநாட்டை யார் கூட்டுவதற்கு முன்வரமுடியும்? ராஜாஜி பிரச்னையை விட இது மாபெரும் பிரச்னையாகி விட்டது.

படாடோபத்துடன் ஆரம்பித்த எழுத்தாளர் மகாநாடு இவ்விதம் படுத்திருப்பதற்குக் காரணம் அஸ்திபாரம் பலமில்லாததுதான் என்பதை யாவரும் உணருவார்கள். மகாநாடு கூட்டினேம் என்ற பெயருக்காகவும் வாழ்த்துக்களுக்காகவும் மாத்திரம் எழுத்தாளர் மகாநாடு கூட்டப்பட்டது. தமிழ் இலக்கிய வளர்ச்சியோ, எழுத்தாளர் கடமைகளோ பற்றி ஒருவரும் சிந்திக்கவில்லை. ஆர்வமிருந்தால் மாத்திரம் போதாது; செய்கையிலும் ஆற்றலிருக்க வேண்டுமென்பதை கோயமுத்தூர் மகாநாட்டை நடத்தியவர்கள் உணரவில்லை. வலிய விருந்துக்கழைத்ததும் அவர்கள் தவறு. 'மரம் பழுத்தால் வெளவாலை வாவென்றழைப்பா'ரில்லை. தாமாகவே அது வரும். ஆகையால், முதலில் உருப்படியான காரியங்களை வைத்துக்கொண்டு, பத்து இருபது வருட வேலைத் திட்டத்தை வகுத்துக்கொண்டு இத்தகைய மகாநாட்டைக் கூட்டுதல் வேண்டும்.

இப்பொழுதுமென்ன; காலம் தாழ்ந்துவிடவில்லை. பழைய படி ஒருதரம் கூடி ஆடிப் பாடிச் சாப்பிடவேண்டிய அவசியமுமில்லை. அங்கங்கே அவரவர்கள் இருந்தாலும் ஒரு ஸ்தாபனமாகவும் கூட்டுறவு இயக்கமாகவும் நடந்துகொள்ள வழியிருக்கிறது. எழுத்தாளர் சமுதாயம் என்ற இயக்கத்தை வளர்ப்பதே நமது முக்கிய நோக்கம். இதற்கு அங்கங்குள்ளவர்கள் தமது திட்டங்களைத் தயாரித்து, பின்னர் எல்லாவற்றையும் ஒன்று திரட்டி ஒருமைப்படுத்தி, அந்தத் திட்டத்தை ஒரு சிறு ஆலோசனைச் சபை மூலம் நிர்வகிப்பதே சரியான முறை என்று எனக்குத் தோன்றுகிறது.

1. எழுத்தாளர் திட்டமாக பத்து வருஷ வேலைத் திட்டம் ஒன்று தயாரித்தல்.

2. நூல் எழுதுதல், வளர்ச்சிக்கேற்ற கொள்கைகடைப்பிடித்தல், பிரசுரக்காரரைக் கட்டுப்படுத்துதல் முதலியன சம்பந்தமாக மேற்படி திட்டத்தில் தெளிவுபடுத்த வேண்டும்.

3. இந்த மாதிரி அவரவர் தத்தமக்குத் தோன்றும் கருத்துக்களைத் திட்டமாக்கி, ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு அனுப்ப வேண்டும்.

4. எழுத்தாளர் ஆலோசனைச் சபை என ஒரு பத்துப்பேர் நியமிக்கப்பட வேண்டும். கூடிய வரையில் கட்சிப்பற்றற்ற எழுத்தாளரையே இதில் கலக்கச் செய்தல் வேண்டும். நடு நிலைமை, ஆழ்ந்த அமைதி முதலிய பண்புகள் அவசியம்.

5. இவ்வாலோசனைச் சபை குறித்த திட்டங்களை ஆராய்ந்து ஒரு தனித்திட்டம் வகுத்து அதனை நிர்வகிக்க வேண்டும்.

ஒரு வழியைக் கடைப்பிடித்து, ஒரு திட்டத்தை அடிப்படையான ஆதாரமாமாகக் கொண்டு இலக்கிய சேவைசெய்தால் இலக்கியமும் வளரும்; எழுத்தாளரும் நன்மை பெறுவார்கள் என்பது எனது அபிப்பிராயம்.

# பலஸ்தீன் சிக்கல் தீர வழி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மான்டெட் என்ற அதிகார ஆட்சிமுறை 1923-ம் ஆண்டில் பலஸ்தீனத்தில் திணிக்கப்பட்டது. இக்காலந்தொட்டு யூதர்களுக்கும் அராபியருக்குமிடையே மிகுந்த சச்சரவு இருந்து வந்துள்ளது. சரித்திரம் இதற்குச் சான்றுபகரும் மாண்டேட் ஏற்பட்ட காலமுதல் இரு ஜாதியினருக்குமிடையே பொதுவான ஒரு நிலையை உண்டாக்குவது பரம சங்கடமாக்கி விட்டது. சமயக் கோட்பாடுகளும், சமூக, கலாசார முரண்பாடுகளும் சமரசத்துக்குத் துணை செய்யவில்லை.

அராபியர்கள் தங்களின் பல நூற்றுண்டு வாழ்க்கையை எடுத்துக்காட்டியும், யூதர்கள் சரித்திர சம்பந்தமாக நிலைபெற்ற தொடர்புகளை யொட்டியும் பலஸ்தீனத்தில் இடம் வேண்டுமென நிற்கின்றனர். போதாததற்கு முதலாவது உலக யுத்தத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றி வைக்கும்படி யூதர்கள் ஒற்றைக் கால்களில் நிற்கின்றனர்.

அமெரிக்க — பிரிட்டிஷ் அரசாங்கங்கள் ஆலோசனை செய்யச் சம்மதித்துள்ள நிபந்தனைகளாவன:

1. யூதர்கள் குடியேற்றம், வாழ்க்கை – இவைகளினல் பலஸ்தீனத்தின் சமூக – பொருளாதாரப் பிரச்னைகள் எவ்வாறு பாதிக்கப்படும்.

2. ஐரோப்பாவில் நாஜிகளின் கொடுமைகளுக்கு ஆட்பட்ட யூதர்களின் நிலையை விசாரிப்பது. அடக்குமுறையின்றி அவர்கள் வாழ்வதற்கான திட்டங்கள் வகுத்தல். இது சம்பந்தமாக பலஸ்தீனத்திற் குடியேற விரும்புவோரின் மதிப்பு.

3, பலஸ்தீன விவகாரம் பற்றி விஷயம் அறிந்த அராபியத் தலைவர்களை விசாரித்தல்.

4. இரண்டாவது குறிப்பிற் கண்ட ஏனைய பிரச்னைகளைப் பற்றியும் இரு அரசாங்கங்களுக்கும் சிபார்சு செய்தல். ஐரோப்பிய நாடுகளில் பரிகாரமான நடவடிக்கை எடுப்பது. அல்லது ஐரோப்பாவுக்கு வெளியேயுள்ள பிரதேசங்களில் அவர்களைக் குடியேற்றுவதற்கான வழிகளைக் காட்டுவது.

கீழ்த் திசையில் வசிக்கும் அறுபதுகோடிமக்களின் வாழ்க்கையை பலஸ்தீனப் பிரச்னை பாதிக்கத்தான் செய்கிறது. பிரிட்டன் அராபியர்களுக்கு அளித்த வாக்குறுதியை மீறிவிட்டதென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. சமீபத்தில் பெவின் விடுத்துள்ள அறிக்கை இந்தியாவில் உள்ள முஸ்லீம்களுக்குக் கூட ஆத்திரத்தை உண்டாக்குவது நூதனமல்ல. வெள்ளை அறிக்கையை பிரிட்டன் மதிக்கவில்லை. அதனின்றும் நழுவிக் கொண்டது. யூதர்களின் குடியேற்றத்தை அராபியர் விரும்பவில்லை. அப்படியிருந்தும் குடி[illegible] பெவின் கூறியுள்ளார். யூதர்களின் குடியேற்றத்தை அமெரிக்கா ஆதரிக்கின்றது. அட்லி அரசாங்கமும் அதற்கு அடிபணிந்தே தீரும். இந்த அழகில் கூட்டு விசாரணைச் சபை ஏதோ எல்லாம் ஆராய்ந்து முடிவு செய்யப் போகின்றதென்பது வெறும் புரளி.

இத்தனை தகராறுகளுக்கும் சிக்கல்களுக்கும் மன்டேட்முறை பலஸ்தீனத்துள் புகுத்தப்பட்டது தான் முதற்காரணம். பெவின் கூட இதை ஒத்துக்கொள்ளுகின்றார். ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காகப் பிரிட்டன் யுத்தத்தில் கைகலந்தது. அதே அரசாங்கம் இப்போது பலஸ்தீனத்துக்கு சுதந்திரம் கொடுக்க மறுக்கின்றது. பிரிட்டனின் யுத்த லட்சியங்கள் அனைத்தும் காற்ருேடு பறந்துவிட்டன. வாக்குறுதி கூட மீறப்பட்டது. பலஸ்தீனத்தில் ஏற்பட்டிருக்கும் தகராறு பரவத் தொடங்குமாகில் உலக சமாதானத்துக்கே உலைவைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படத்தான் செய்யும்.

ஹிட்லர்தான் மக்களின் உரிமைகளைப் பறிமுதல் செய்பவர் என்ருல், எதற்காக, அவருடைய அடிச்சுவட்டை ஏகாதிபத்திய வெறிகொண்ட பிரிட்டனும் பின்பற்ற வேண்டும்?

— இ. அ.

# பிரிட்டனுக்கு லஸ்கி சாட்டை

"ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் பாதுகாப்பதற்காகவே யுத்தத்தில் ஈடுபட்டோமென சகல கட்சிகளின் தலைவர்களும் நம்மிடந் தெரிவித்தனர். சுதந்திரமும் ஜனநாயகமும் ஜாதி, மத நிற பேதமற்ற முறையிற் சகல சமூகத்தாரதும் பிறப்புரிமைகளாகும். இந்த லட்சியங்களைப் பாதுகாப்பதற்கு பிரிட்டன் முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளாதுபோனல் கடந்த ஆறுவருட காலமாக ஜனநாயகத்தின் பெயராலும் சுதந்திரத்தின் பெயராலும் யுத்தகளத்தில் தங்கள் உயிரைத் தியாகம் செய்துள்ள ஆண் பெண் அனைவருக்குந் துரோகம் செய்தவர்களாகின்றனர்." என லண்டனில் நிகழ்ந்த நேருஜியின் 56-வது ஜயந்தி விழாவின்போது தொழிற் கட்சித் தலைவரான பேராசிரியர் லஸ்கி கூறினர்.

"பஸிபிக் பிரதேசங்களில் கொடுங்கோல் ஆட்சியை ஏற்படுத்த பிரிட்டன் இந்திய துருப்புகளை உபயோகிப்பது மிகுந்த வெட்கத்தையும் அதிக வருத்தத்தையும் தரும்செய்தியாகும். பிரான்சு இந்தோசீனத்தில் பிரான்சு ஆதிக்கத்தை நிலைநாட்ட பிரித்தானிய அரசாங்கம் உதவிசெய்வதற்கு எவ்வித நியாயமிருக்கின்றதோ இறைவனுக்குத்தான் தெரியும். அதேபோல ஜாவா விவகாரத்திலும் பிரித்தானிய இந்தியத் துருப்புகளை உபயோகிப்பதற்கு எந்தவிதமான ஆதாரங்களும் ஒல்லாந்தர் அரசாங்கத்திற் காண்பதற்கில்லை.

"உண்மையைக் காப்பதற்காகவே நாங்கள் அவர்களை யுத்த முனைக்கு அனுபிப்னேமோ அன்றேல் பச்சைப்பொய் ஒன்றினுக்காக நாங்கள் அவர்களைப் போர்க்களத்துக்கு அனுப்பினேமோ வென்பதுதான் இன்றைய ஜனநாயக உலகத்தின் கேள்விகள்.

இந்திய சிறைச் சாலைகளை மீண்டும் நிரப்புவது, அரைகுறையான ஆயுதபாணிகளாக விருக்கும் இந்தோனேஷிய மக்களை நிர்மூலஞ் செய்தல், தங்கள் தலைவிதியை நிர்ணயிப்பதற்காகபாடுபடும் அன்னமியர்களை நவீன யுத்த சாதனங்களைக் கொண்டு வேட்டையாடுதல்போன்றனவே எங்கள் இலட்சியங்களாகில் யுத்தகளத்திலே உயிர்த் தியாகம் செய்தவர்களை நாங்கள் வெறும் பொய் ஒன்றினிற்காகப் போர் செய்யும்படி கேட்டுக் கொண்டிருக்கிறேமென்பது நிச்சயமாகி விடுகின்றது."

பேராசிரியர் லஸ்கி ஜவஹர்கர் பற்றிக் குறிப்பிட்டதாவது: "நேரு எனது பழைய நண்பர். அவருடன் நட்புரிமை பாராட்டுவது எனக்குப் பெருமையைத் தருகின்றது. இந்தியத் தேசிய காங்கிரஸின் தலைவர்களுள் நேரு ஒருவர்தான் அரசியலுக்கும் பொருளாதாரத்துக்குமுள்ள தொடர்பினை நன்கு தெரிந்தவர். இந்திய மக்களின் வறுமையை வேரறச் செய்வதையே தேசிய இந்தியாவின் முக்கிய பிரச்னையாகக் கருதி மிகவும் பாடுபட்டு வருகின்றார்."

# கீழ்ப்படியாத மூவர்

## தமிழ்க் காங்கிரஸின் நடவடிக்கை

வெள்ளை அறிக்கைக்குச் சாதகமாக திருவாளர்கள் தியாகராஜா, நடேசன், இராஜகுலேந்திரன் ஆகியோர் தங்கள்வாக்குகளை அளித்தது, அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸ் என்ற அரசியல் ஸ்தாபனத்துக்கு ஆத்திரத்தைக் கிளப்பியிருக்கின்றது. காங்கிரஸின் நிபந்தனைகளை இவர்கள் மீறிவிட்டபடியால் அவர்கள் காங்கிரஸினின்றும் வெளியேற்றப்பட்டிருக்கின்றனர்.

இது ஒருபுறமிருக்க ஸ்ரீ நடேசன் இப்போது சில மாதங்களுக்கு முன்னதாகவே தமிழக் காங்கிரஸை விட்டு விலகி விட்டார். ஸ்ரீ தியாகராஜா இம்மாதம் 13-ந் திகதி ராஜினமாச் செய்துவிட்டார். ஸ்ரீ இராஜகுலேந்திரனின் இராஜினமாக் கடிதம் ஆங்கிலத் தினசரி ஒன்றில் காணப்பட்டது. இந்த அழகில் நேற்று முன்தினம் கூடிய காங்கிரஸ் நிர்வாகசபை குறித்த மூவரையும் நீக்கியிருப்பதும் ஒரு புதுமைதான்.

# ORDER NISI

*In the District Court of Jaffna.*

In the matter of the last will and testament of the late Richard Rasiah Girdwood of Nallur Jaffna

*Deceased*

*Testamentary Jurisdiction* } No. 452

**Lowe William Ponnuthurai of Nallur Jaffna.**

*Petitioner.*

*Vs.*

1. **Mary Gnanaparanam Girdwood widow of Richard Rasiah Girdwood and**
2. **Adams Richard Gnanarajah both of Nallur Jaffna.**

*Respondents.*

This matter coming on for disposal before E. Wijeyawardene Esquire, Additional District Judge Jaffna on 11th. day of September 1945 in the presence of Mr. V. Somasunderam, Proctor, on the part of the petitioner and the affidavit of the abovenamed petitioner dated the 31st. July 1945 having been read:

It is ordered that the will of the late Richard Rasiah Girdwood deceased dated 17th December 1944 and numbered 713 and attested by V. Somasunderam, Notary Public, be and the same is hereby declared proved and that the said Lowe William Ponnuthurai of Nallur Jaffna petitioner is the executor named in the said will and that he is entitled to have Probate of the same issued to him accordingly unless the respondents or others shall on or before the 24th day of October 1945 show sufficient cause to the satisfaction of this court to the contrary.

This 11th day of September 1945

(*Sgd.*) S. S. J. Goonesekara
District Judge

Time to show cause is extended and reissued returnable 28-11-45

(Sgd.) S. S. J. Goonesekera
D. J.

# தேகவியோகம்

## திரு. M. பஸ்தியாம்பிள்ளை

யாழ்ப்பாணப் பட்டினத்திலே சுண்டிக்குளியிலுள்ள பஸ்தியாம்பிள்ளை புத்தகசாலையின் அதிபராகிய திரு. M. பஸ்தியாம்பிள்ளையவர்கள் தம்மைச் சிலநாட்களாகப் பிடித்துவருத்திய நோய் காரணமாக, சென்ற வியாழக்கிழமை (8-11-45) தமது "திரேசா" இல்லத்தில் இவ்வுலக வாழ்வை யொருவினர். இவருடைய பிரேத அடக்கம் முதலிய கருமங்கள் அடுத்தநாளாகிய வெள்ளிக்கிழமை பிற்பகல் அவருடைய சமைய முறைப்படி நடைபெற்றன. இவருக்கு இறக்கும்போது வயசு 58. இவர் ஆன்மா சாந்தியடைக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நமது வாசிகசாலை

## ஐந்தாம்படை ரஸிகர்கள்

ஆசிரியர்: சாலிவாஹனன்; கிடைக்குமிடம்: கஸ்தூரி புத்தக நிலையம், திண்டுக்கல். பக்கம்: 24; விலை: அணா 8.

கம்பராமாயணத்தில் டி. கே. சி. யால் செய்யப்படும் பாடத் திருத்தத்(சிதைவை)தைப் பொறுக்கமாட்டாத சாலிவாஹனன் அவர்களது ஒரு சிறிய கட்டுரை ஒரு மிகச் சிறிய நூலாக 'ஐந்தாம்படைரஸிகர்கள்என்றும் பெயருடன் வெளிவந்திருக்கிறது. இவ்வளவு சிறிய நூலாக ஆராய்ச்சிக்குறைவுடன் வெளியிட்டமை அவ்வளவு புத்திசாதுரியமாகாது. இந்நூல் இந்த ரூபத்தில் வெளிவந்திருக்கவேண்டிய அவசியமில்லை என்பதற்கு இவ்விஷயம் கட்டுரையாகப் பத்திரிகையில் வெளிவந்தமையையும் ஒரு காரணமாகச் சொல்லலாம்.

இந்நூலில் பதப்பிரயோகங்கள் கூரிய வாள் போன்றிருப்பதை ஆசிரியரே ஒப்புக்கொண்டு அதற்குக் காரணமும் சொல்லியிருக்கிறார். ஆயினும் நூல்— கட்டுரையாசிரியர்கள் தமது பொறுமையை இழக்காது சாவதானமாக நின்று தம் கட்சியைக் கூறல் வாசகர்களது அநுதாபத்தைப் பெற வழியாகும்.

டி கே. சியின் இந்த வேலையை ஐந்தாம்படை வேலை என்பதை நான் ஒப்புக்கொள்ளமுடியாது. அறியாமையாலும், மற்றவர்கள் (சில பிரபலஸ்தர்கள்) அவரைத் தூக்கி வைத்தமையாலும் ஏற்பட்ட அகம்பாவமே இந்த நிலைமைக்குக் காரணமின்றித்தமிழை அழித்துவிட வேண்டுமென்றும் நோக்கம்தான் என்று சொல்வதை என் மனம் ஆட்சேபிக்கின்றது.

'வள்ளல் மணத்தை மகிழ்ந்தனன் என்றால்' என்ற பாடலில் 'வெள்ளை மனத்தான்' என டி. கே. சியின் பதிப்பிலன்றி வேறு பதிப்புகளிலும் (யாழ்ப்பாணம் அ. குமாரசுவாமிப் புலவர் பதிப்பிலும்) காணப்படுகிறது. இது பாடபேதம். இது டி. கே. சியின் திருத்தமல்ல. பாடபேதங்களுள் ஒன்றை விளங்கி நயம் கூற யாருக்கும் உரிமையுண்டு. டி. கே. சி. போல் முன்னோர் இருந்தபடியால் இப்பொழுது கம்பராமாயணம் முதலிய நூல்களில் பாட பேதம் இருக்கிறது. டி. கே. சியினால் இன்னொரு பாடபேதம் ஏற்படுவதைத் தடுத்தல் புத்திசாலிகள் செயல்தான். 'மாதர்கண் கற்பின் மிக்கார்' என்ற பாடலில் 'கற்பு' என்பதன் பொருள் விளக்கம் நன்கு புலனாகாத டி. கே. சி. 'மாதர்கள் வயதின் மிக்கார்' என மாற்றினார். அதற்கு மற்றொரு பிரபல பத்திரிகாசிரியர் மெருகு கொடுத்தார். இவ்வாறு பொய் விளம்பர கர்த்தாக்களின் மூலமே டி. கே. சி இவ்வளவு கெட்டுப் போனார் என்றால் அது அவ்வளவு வழுவாகாது.

பல்+கடல்= பால்க்கடல் எனவும் 'ஒருவன்' என்பதன் பெண்பாலாக 'ஒருவள்' எனவும் வழங்க விதியமைக்கும் இக்காலத்து நாம் எதனைத்தான் எதிர்பார்க்கமுடியாது.

—வ. நடராசா

●

**கன்னித் தெய்வம் :** ஆசிரியை: ஸ்ரீமதி எம். எஸ். கமலா; தமிழ்ச்சுடர் வெளியீடு; விலை: ரூ. 2-4-0.

இக்கதாமாலையில் நாம் சந்திக்கும் ராஜமும் ஜனார்த்தனனும், உஷாவும் பிரபாவும், ஸதயனும் ஸரயூவும், மணியும் ஸோக்கும், சென்னனும் நிர்மலாவும், சுந்தரியும்—ஆம் 'கன்னித் தெய்வம்' என்ற கதையில் வரும் சுந்தரியின் நினைவு வரும்பொழுது கொஞ்சம் நின்று அவளை வணக்கத்துடன் நினைவுகூராமல் இருக்கமுடியவில்லை. நித்திய கன்னியாகவே கண்முன் வந்து நிற்கிறாள்.

வாழ்க்கையில் மணத்தின் தூய்மையையும் இனிமையையும் கொண்டு வரும் தன்மை சுந்தரியினுடையது. இல்லற வாழ்வில் மனிதனுக்கு ஏதோ ஒன்று தேவையாயிருக்கிறது; அது பணமுமல்ல; பிள்ளைகளுமல்ல; அழகான பெண்ணுமல்ல; அதைக் கொடுக்கக் கூடியவளும் மனைவி ஒருத்தியே; அவளும் தன் பிறந்தகம் போய்விட்டால், அந்த 'ஏதோ ஒன்று' அற்று ஆண்மகன் அதற்காக ஏங்குகிறான். அதைச் சுந்தரி இக் கதையில் வரும் ஆடவனுக்குத் திரிகரண சுத்தியுடனும், களங்கமில்லாத ஒரு தெய்வீக அன்புடனும் நிறைவேற்றி வைக்கிறாள்; மனைவியின் பிரிவால் வாடி, படுக்கையாய்க் கிடந்த ஆடவனுக்குச் சுந்தரியின் சேவையால் உயிரே மீண்டும் திரும்பிவிடுகிறது; அவனது தாம்பத்திய வாழ்க்கை மீண்டும் சுடர்விட்டு பிரகாசிக்கிறது.

சுந்தரியின் இந்தத் தந்நலமற்ற சேவை, அவள் ஏதோ விஷம் தீண்டி இறந்துபோவதினால் புடம் போட்ட பொன் போல் மேலும் துலங்குகிறது. அவள் மேல் எங்களுக்கு ஏற்பட்ட மதிப்பு அவளுக்கு நேர்ந்த அகால மரணத்தினால் வளர்ந்து, எங்கள் அனுதாபத்தையும் பெற்று நெஞ்சில் தனி இடம் பெற்றுவிடுகிறது.

சமீபத்தில் ஐரோப்பாவில் ஒரு புது சம்பிரதாயம் இலக்கிய ஆசிரியர்களிடையே தோன்றியிருக்கிறது. அதாவது உள்ளதை உள்ளபடி பச்சையாய்ச் சொல்லும் ஒரு வழக்கம். இதைப் பின்பற்றியோ என்னவோ, ஸ்ரீமதி கமலாவும் 'விடிந்தது' என்ற கதையில் வரும் மணியையும் ஷோக்கையும் கொஞ்சம் வெட்டவெளிச்சயாகவே 'சேர்த்து' வைக்கிறார். சமூகத்தில் சீர்திருத்தம் கொண்டு வர விரும்பும் இந்த ஆசிரியை, இலக்கியத்திலும் ஒரு புரட்சியைக் கொண்டுவரும் முயற்சியா என்ன? இலக்கிய வரம்புள் கட்டுப்பட்டு, அச் சம்பிரதாயத்துடன் வளர்ந்த மனப்பான்மையால் எங்களுக்கு இது இப்படித் தோன்றலாம் என்றாலும் இக் கதையின் இப்பகுதியில் கொஞ்சம் அளவுக்கு மிஞ்சியே வர்ணம் சேர்க்கப்பட்டு விட்டதென்று தோன்றுகிறது.

பெரும்பாலான கதைகளில் சிறு கதைக்கு வேண்டிய கட்டுக்கோர்ப்பும், உணர்ச்சி வேகமும், சொற்செட்டும் காண முடியவில்லை. 'விடிந்தது': 'சுயவரம்' 'உஷா' முதலிய கதைகளை இன்னும் சில சம்பவங்களையும், பாத்திரங்களையும் சேர்த்து, விஸ்தாரமாக்கி நாவல்களாகவே அமைத்துக்கொள்ளலாம்.

தமிழ் மொழியில் வழக்கத்தில் இல்லாத, அனேக சமஸ்கிருத பதங்கள் இக்கதைகளில் தோன்றுவது, தமிழ்ப் பாஷைக்கு புஷ்டியும், காம்பீரியமும் கொடுக்கிறேமென்ற எண்ணமாயிருக்கலாம். இதை நானும் வரவேற்கிறேன்.

ஸ்ரீமதி கமலாவின் தமிழ்ப் பாஷையிலே எவ்வளவு வேகம்? என்ன சொற்செருக்கு! என்ன இருந்தாலும் "மெல்லியாருக்"கு இவ்வளவு வேகமும் செருக்கும், ஆகாதப்பா.........!

—சி. வைத்தியலிங்கம்

●

**கொய்த மலர்கள்:** ஆசிரியர்: நூர்; பிரசுரம்: கவிக்குயில் நிலையம்; கோட்டாறு; பக்கம்: 54; விலை: அணா 14.

"பிறநாட்டு நல்லறிஞர் சாஸ்திரங்கள் தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்" என்று [illegible] பாரதியார் [illegible] மும் தொடறப்புற்றிருக்கும் இக் காலத்தில் இப்பணி தமிழ் வளர்ச்சிக்கு இன்றியமையாதது எனக் கண்டார். இது யாவராலும் ஒப்புக்கொள்ளத் தக்கதே. இப் பணியில் ஆசிரியர் 'நூர்' அவர்கள் முயன்று அரிய தமிழ் வசன கவிதைகளைக் கொண்ட 'கொய்த மலர்கள்' என்னும் நூலை தமிழுலகத்துக்குத்தந்திருக்கிறார். தமிழிலக்கியங்களிலும் பிறமொழி இலக்கியங்களிலும் உண்டான அறிவுத் தேர்ச்சியினாலேயே இப் பணியைச் செய்துள்ளார் என்பது இந்நூலைப் படிப்பார்க்கு விளங்கும். —நா. க.

●

**முதல் முத்தம் :** ஆசிரியர்: கம்பதாஸன்; பிரசுரம்: பாசரசு காரியாலயம், பெரம்பூர், சென்னை; பக்கம்: 32; விலை: ரூபா 1-0-0.

இந்நூல் கம்பதாஸனின் கவிதைத் தொகுதியாகும். இக் கவிதைகள் அவரது உண்மையான உணர்ச்சியின் வழிப் பிறந்தன. இவற்றில் காணப்படும் கற்பனைகளும், உவமை உருவகங்களும் பிறநூலில் இருந்து திருடப்படாதவை; சொந்த அறிவாற் பிறந்தன. ஒவ்வோர் கவியும் சிறந்த பொருளையும் சுவையையுங் கொண்டது. அவரது உள்ளத்திலிருந்து. ஒருவித தடையுமின்றி இயல்பாக எழுந்த கவிகள். தமிழன்பர்கள் இதை வாசித்து இன்புற வேண்டும். —நா. க.

●

### 'சிவாஜி' ஆண்டுமலர்

சிவாஜியின் 11வது ஆண்டு மலர் வெளிவந்தது கண்டு மகிழ்வுறுகின்றோம். அரசினரின் காகிதக்கட்டுப்பாட்டால் எத்தனையோ மலர்கள் வெளிவர முடியாதிருக்கும் இவ்வேளை, சிவாஜியின் ஆண்டுமலர் வெளியானது வாசகர்களால் மகிழ்வுடன் வரவேற்கத் தக்கதே.

சிறந்த எழுத்தாளர்களின் பல துறைப்பட்ட கட்டுரைகளால் வாசகர்கள்உள்ளங்களைக்கவர்வது: சிறந்த நகைச்சுவை ததும்பும் கற்பனைக்கதைகள் மாத்திரமன்றி, வாசகர்களின் அவாவுக்கேற்ப சங்கீதம், சரித்திரம், விஞ்ஞானம் பிரயாணக்காட்சி, ஆராய்ச்சி முதலிய பலதிறக் கட்டுரைகளைக் கொண்டிருத்தல் யாவராலும் விரும்பத்தக்கதாகும்.

இயற்கை, வானும் மீனும், சூரியன், சந்திரன் முதலியவற்றைக் கொண்டு கற்பனை செய்து 'அவை பேசினால்' என்ற முகப்புடன் எழுதப்பட்டிருக்கும் கட்டுரை வாசகர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பதுடன் அவ்வெழுத்தாளரின் நுண்ணறிவைப் புலப்படுத்துகின்றது.

திரு. பிச்சமூர்த்தி யவர்களின் 'மாறும் இலக்கணம்' விவாதத்தைக் கிளப்புவது. காலத்துக்கேற்ப இலக்கணம் மாறவேண்டுமென இவர் காட்டும் ஆதாரங்களை நடுநின்று ஆராய்தல் வாசகர் கடனாம். கற்பனைக் கதைகளில் கன்னியர்களைப் பெரிதும் குணநலங்களாற் சோடித்து எழுதுவார்கள்; ஆனால் இதில் 'பூசாரி மகள் பொன்னு' என்பதை எழுதியவர் புதுமுறையில் துஷ்டப் பெண்ணைச் சோடித்து எழுதி முடித்திருப்பது வியக்கற்பாலது. —நா. க.


**SAMUEL SONS & Co., Ltd.,**

HOSPITAL ROAD, JAFFNA

T'GRAM: ECHIRON T'PHONE: 62

Head Office:- 371, OLD MOOR ST., COLOMBO

★

ஆசிய ஐரோப்பிய யுத்தம் இனிது நிறைவேறியது. பல நற்பொருட்கள் வர ஆரம்பித்துவிட்டன. வண்டி வளையம், அச்சு, முட்கம்பி, முதலிய இரும்பு சாமான்களும், கல்வனைஸ் தகடுகள், பலவின வாளிகள், பித்தளைத்தகடு, பூட்டு, பிணைச்சல் வகைகளும், நீர் இறைக்கும் யந்திரங்கள், குழாய்கள், நீர் வடிகட்டிகள், கைத்தொழில்களுக்குரிய ஆயுதங்கள், கன்வேஸ் துணிகள், பருத்திக் கம்பளங்கள் முதலியனவும் தொகைக்கும் சில்லறைக்கும் இங்குபெற்றுக்கொள்ளலாம். தற்போது ஏராளமானவை கைவசம் இருக்கின்றன.

★

**சாமுவேல் சன்ஸ் & கம்பெனி லிமிரெட்**

ஆஸ்பத்திரி ரேட் : : யாழ்ப்பாணம்

தந்தி: 'எச்அயர்ன்' 'போன்: 62

[2512]


### 189-வது இலக்க ஜவுளிக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

திருத்தம் செய்யப்பட்ட கூப்பன் மதிப்பு

9-11-45-ந் திகதி வெளியான .........ஆம் இலக்க அரசினர் கஸெற் பத்திரிகையில் உள்ள அறிவித்தலைக் கவனிக்குமாறு எல்லா வியாபாரிகளையும் பொதுமக்களையும் கேட்டுக் கொள்ளுகிறோம். அவசியமான வேறு விஷயங்களுடன், 1945-ம் ஆண்டு நவம்பர் மீ 15-ந் திகதி தொடக்கம் சாதாரணமாகக் கெஜக் கணக்கில் விற்கப்படும் புடவைகளுக்குரிய திருத்தம் செய்யப்பட்ட கூப்பன் மதிப்பு பின்வருவது போலக் கொடுக்கப்பட்டுள்ளது.

| | ஒரு கெஜத்தின் கூப்பன் புள்ளி மதிப்பு |
|---|---|
| 38 அங்குல விதி (அகலம்) வரையும் | 1 |
| 38 அங்குலங்கட்கு மேற்பட்டு 56 அங்குலங்களுக்கு அதிகப்படாதது | 1½ |
| 56 அங்குலங்கட்கு மேற்பட்டது | 2 |

வேறு எத்தனையோ பொருட்களுக்குக் கூப்பன் இல்லாமற் செய்யப்பட்டுள்ளது. ஆனால் அவைகள் ஏற்றுமதி செய்யும் நாடுகளிலிருந்து இலங்கைக்கு என அனுப்பப்படும் கோட்டாத் தொகைக்குள் அடங்காத பருத்திப் புடவைகளாயிருக்கவேண்டும். அவ்வகையான சரக்குகளை கை இருப்பில் வைத்திருக்கிற வியாபாரிகள் அவை பருத்திப் புடவை வகைக் கோட்டாவுக்குள் சேரவில்லை என்று தருந்த எழுத்துச் சாதனங்கள் மூலம் எம்மை நம்பச் செய்வதுடன் அவைகளைக் கூப்பனின்றி விற்குமுன் "கூப்பன் அற்றது" என அடையாளமும் போடுவிக்க வேண்டும்.

ஈ. ரெட்றிக்கோ
ஜவுளிக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு 7-11-45 [2536]


# தேகபுனிதத்திற்காக

## — எந்தெந்தக் காலத்திலும்!

தேகதுர்நாற்றம் (B. O.) உண்டாவதற்குக் காரணமானதும், தேகபுனிதத்தின் எதிரியுமான—கெட்ட வியர்வையிலிருந்து சரும துவாரங்களைக் காப்பாற்றுவதற்காகவே லைவ்போய் டொயிலட் சோப்விசேஷமாகத்தயாரிக்கப்பட்டது




LEVER BROTHERS (CEYLON) LIMITED


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஜெர்மானிய தொடர்கதை

# மன விகாரம்



— தொமஸ் மான் —

மொழிபெயர்ப்பு ★ சோணுசலம்

## பூர்வ கதை

கலைஞன் ஒருவனின் வாழ்க்கை கசப்புத்தட்டிய போதிலும் அபூர்வமான ஒரு விஷயம் குறுக்கிடுகின்றது. குதிரைவண்டி ஒன்றுள் கண்ட அதே இளம் பெண்ணை இசைக்கச்சேரியிலும் பார்த்துச் சொக்கிவிடுகின்ருன். இதற்குள் மற்றுமோர் யௌவன புருஷன் அப் பெண்ணுடனும் அவளின் தந்தையுடனும் கச்சேரி நிகழும்போதே கண்டு பேசிக் கொள்ளுகின்றனர். மதிப்பு மிகுந்த இப் பிரமுகர் கௌரவமான உடையுடன் காணப்படுகின்ருர். அப் பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்வதென்ருல் அவருக்கு அது கஷ்டமான வேலையல்ல. அம்மங்கையின் புன்முறுவலே ஒரு செல்வம் என்பது கலைஞனின் அபிப்பிராயம்—....

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பின்னர் என்பாடுதான் என்ன? நான் மண்டபத்தில் உள்ள சாதாரண மனிதர்களுடன் தான் இருக்கின்றேன். தூரத்தே இருந்தவண்ணம் மேடைமீது காணப்படும் அந்த விலை உயர்ந்த மாணிக்கத்தையே பார்த்துக்கொண்டிருக்கின்றேன். என்ருற் பெற முடியாத அந்தப் பொருள், கவைக்கும் உதவாத ஒரு ஜடகத்துடன் பேசுவதையும் சிரிப்பதையும் பார்த்து என்பாட்டில் மப்புமந்தாரமான ஒருநிலையில் ஆந்தை போல் இருக்கின்றேன். என்னைத் திரும்பிப் பார்ப்பார் ஒருவருமில்லை. நான் ஒதுக்கிவிடப்பட்ட பேர்வழி. சமூகம் என்னைத் தீண்டவும் மாட்டாது. என்னைப் பார்த்து நானே இரங்கவேண்டியதுதான். ஒரு அலங்கோல நிலை என்று சொல்லுங்களேன்!

கதம்பக்கச்சேரி முடியும்வரை நான் அங்கு நின்றேன். அவர்கள் மூவரும் தொப்பியை எடுத்துமாட்டுவதும், ஒருவரோடு ஒருவர் பேசுவதுமாக அங்கும் இங்கும் தொங்கிப் பாய்ந்துகொண்டு நின்றனர். இதற்கிடையில் பக்கத்திற் போகும் பெண்மணியுடன் ஒரு வார்த்தை, எதிரே வரும் உத்தியோகஸ்தருடன் சிறிது நேரம் நின்று பேசுதல் இந்தமாதிரி நட்புரிமை கொள்ளவும் கொண்டனர். அந்த யௌவன புருஷன் மண்டபத்தை விட்டுத் தனியே வெளிக்கிளம்பவில்லை. தகப்பனும் மகளும் புடை சூழத்தான் அவர் புறப்பட்டார். மண்டபவாசலையுந்தாண்டி, இவர்களைப் பின் தொடர்ந்து நானும் சென்றுகொண்டிருந்தேன்.

அதிர்ஷ்டவசமாக அன்று மழை பெய்யவில்லை. ஆகாயத்தில் ஒரு சில வெள்ளிக் கூட்டம் இமைகளைச் சிமிட்டிக்கொண்டிருந்தன. அம்மூவரும் வண்டியிலும் செல்லவில்லை. ஒருவரோடு ஒருவர் ஆனந்தமாகப் பேசியவண்ணம் உல்லாசமாக நடந்துசென்றனர். நான் இவர்களுக்குப் பின்னுல் சிறிதளவு தூரத்தில் அடிமேல் அடிவைத்து நகர்ந்துகொண்டிருந்தேன். எனது உள்ளத்தில் இருள் கவிந்துவிட்டது. ஏதோ வேதனை செய்யும் ஒரு நிர்ப்பந்தம் இதே இருதயத்தை நொருக்குவது போன்ற நிலை.... அவர்களும் நடந்துகொண்டே யிருக்கப் போவதில்லை. வீதி ஒன்றைக் கடந்தார்களோ இல்லையோ பெரியதோர் வீட்டுக்குமுன் தங்கினர். வீடு பெரியதுதான். ஆனுல் முகப்புக்கூடம் ஆடம்பர முறையில் அமைந்திருக்கவில்லை. தகப்பனும் மகளும் இதற்குட் புகுந்து மறைந்து கொண்டனர். கூட வந்தவரிடம் பரிவுடன் விடையும் பெற்றனர். துணையாகச் சென்றவரும் தனது நடையைத் துரிதமாக்கிக்கொண்டார்.

அந்தப் பெரிய வீட்டை வேலைப்பாடுகள் மிகுந்த காத்திரமான கதவுகள் அலங்கரித்தன. ஒரு கதவில் பின்வருமாறு கண்டிருந்தது: 'நியாயதுரந்தரர்—ரெயினர்'.

எனது குறிப்புப் புத்தகத்தில் எல்லாவற்றையும் எழுதியே தீரவேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டேன்- இருந்தும் உள்ளத்தே நிகழும் ஓர் உணர்ச்சி என்னை இருந்த இடத்தையும் விட்டு ஓடத்தான் செய்கின்றது. இதுகாரணமாக எனக்கு இளைப்பும் அத்துடன் தளர்ச்சியும் ஏற்பட்டு உள்ளத்தைக் களைக்கப்பிடித்துவிட்டன. எல்லாவற்றையுங் கவனிக்கும்போது வாழ்க்கையே சாரமற்றுவிடுகின்றது.

நகரமண்டபத்தில் பலவிசேஷ கடைகள் ஏற்படுத்தி அதில் இருந்து கிடைக்கும் பணத்தை ஒரு தர்ம விஷயத்துக்கு உதவப்படுமென்ற செய்தி மூன்று மாதங்களுக்கு முன்னர் பத்திரிகைகளில் அடிபட்டது. இதில் அற்புதமான பெண்களும் பங்குபற்றுவார்களென்றும் சொல்லப்பட்டது. பத்திரிகையில் இச் செய்தியை நான் கவனமாகப் படித்துவிட்டு, எப்படியும் இதற்குப் போகவேண்டுமென முடிவு கட்டிவிட்டேன். அப்பெண்ணையும் அங்கு பார்க்கலாம்தானே. ஆமாம், அங்குள்ள ஒருசாலையில் அவள் நிற்கவேநிற்பாள். அப்புறம் அவளை நான் பாக்கலாந்தானே! அவளிடம் அணுகுவதை யார் தடைசெய்வது? என்று நான் என் பாட்டில் நினைத்துக் கொண்டிருந்தேன். பாரபட்சம் ஒன்றுமில்லாமற் சொல்வதென்ருல் நான் உண்மையாகவே நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவன். அத்துடன் போதிய பண்பாடும் எனக்கு உண்டு வுரோலீன் ரெயினர் ஓர் அழகான பெண். அப்படியென்ருல் அந்த அற்புதமான மார்பணி தரித்த ஆடவனுக்கு அவளுடன் பேச எவ்வளவு உரிமை யுண்டோ அவ்வளவு உரிமை எனக்கும் இருக்கத்தான் செய்யும். ஆனந்தமாக நாலு வார்த்தைகள் பரிமாறுவதை யார் தடை செய்யலாம்.

அன்று சாயந்தரம் ஒரே காற்று. மேகம் பொத்துக்கொண்டு மழையை வருஷித்தது. நகர மண்டபத்தை நோக்கி நான் சென்றுகொண்டிருந்தேன். மண்டபத்தின் வாசலில் ஏகப்பட்ட ஜனத்திரள், வண்டிகள் வரிசையாக நின்றன. ஜனக் கூட்டத்தைக் கிழித்துக்கொண்டு ஒரு மாதிரி உள்ளே நுழைந்துவிட்டேன். பிரவேசக் கட்டணத்தைப் பெற்றதுதான் தாமதம் எனது தொப்பியையும் மேற்சட்டையையும் ஓரிடத்திற் பத்திரமாக வைத்துவிட்டு மேல்மாடிக்குப் போகும் படிக்கட்டை நோக்கினேன். மேல்மாடத்தை அன்று சேர்வது சிறிது கஷ்டமாகத்தான் இருந்தது. எப்படியிருந்தும் விருந்து மண்டபத்தையடைந்துவிட்டேன்- உவைன் மணமும் ஏனைய பண்டங்களின் வாசனையுஞ் சேர்ந்து என்னை மூச்சுத் திணறச் செய்தன. இவற்றுடன் பேச்சும், சிரிப்பும், இன்னிசையும்,மணியோசையும், இரைச்சலும் ஒன்று கலந்து ஒலித்தன. (தொடரும்)

## ஸ்ரீ. ஏ. கே. செட்டியார் அவர்களுக்கு வரவேற்பு

சென்ற 9உ வெள்ளிக்கிழமைமாலை 5–30 மணிக்கு ஸ்ரீ. செட்டியார் தங்கியிருந்த இல்லத்திலிருந்து, மட்டக்களப்பு மக்கள் மேளதாளத்துடன் மலர்மாலை அணிவித்துக் கடைத்தெரு வழியாக அர்ச். மிக்கேல் கல்லூரி மண்டபத்துக்கு அழைத்துச் சென்ருர்கள்.

மாலை 6 மணிக்குக் கல்லூரி மண்டபத்தை அடைந்ததும் பட்டினசங்கத்தலைவர் அவர்கள் ஸ்ரீ. ஏ. கே. செட்டியார் அவர்களைச் சபைக்கு அறிமுகம்செய்துவைத்தார். அப்பால்செட்டியாரவர்கள் தமது சுற்றுப் பிரயாணத்தை: ஜப்பான், ஆபிரிக்கா, அமெரிக்கா, ஐரோப்பா முதலிய இடங்களில் கண்டவற்றையும் அனுபவித்தவற்றையும் சபை மகிழத்தக்க முறையில் ஹாஸ்யம் ததும்ப ஒன்றேகால் மணித்தியாலம் பேசியுள்ளார்.

கடைசியாக திரு. க. நடராஜன் மட்டக்களப்பில் இதற்கு முன் இத்தகைய மாபெருங் கூட்டம் நடைபெறவில்லையென்றும், ஜனங்கள் இருக்க இடமில்லாமல் நூற்றுக்கணக்கானோர் நின்றமை இதுவே முதற்றடவையென்றுங் கூறி எல்லோருக்கும் நன்றி தெரிவித்தார்.

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயத்துக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

## 190-வது இலக்க ஜவுளிக் கட்டுப்பாட்டு அறிவித்தல்

வியாபாரிகளுக்கு அறிவித்தல்

வியாபாரிகள் புடவை வாங்க வரும் வாடிக்கைகாரர்கள் கொடுக்கும் ஏதாவதொரு ஜவுளிக் காட்டில் இருந்து எடுக்க வேண்டிய கூப்பன்களை ஒரே துண்டாகக் கத்தரித்து எடுக்கும்படி யோசனை கூறப்படுகின்றனர். அந்தத் துண்டை ரிசுக் காகிதத்தில் ஒட்டுவதற்கு மீண்டும் துண்டுகளாக்கப்பட வேண்டியதில்லை. ஆனுல் ஒரு நிரையில் 12 கூப்பன்கள் இருக்கத் தக்கதாக அதைப் பூர்த்திசெய்ய வெட்டி எடுக்கலாம். 1-வது ஜவுளிக் கட்டுப்பாட்டுக் கட்டளையின் பந்தி 5 (2) அதாவது ஒவ்வொரு கூப்பனுக ஒட்டப்படவேண்டுமென்பது இதனுல் ரத்தாகிறது.

2. சில தருணங்களில் ரிசுக் காகித சீட்டுகளில் ஒருமுறை ஒட்டப்பட்ட கூப்பன்கள் அந்தச் சீட்டில் இருந்து முதல் உபயோகமான ரிசுக் காகிதத்தின் பாகங்கள் அவற்றில் ஒட்டுப்பட்டும் ஒட்டுப்படாமலும் இருக்க எடுக்கப்பட்டு வேறுசீட்டில் மறுபடியும் ஒட்டப்படுகின்றன. சில வேளைகளில் இன்னெருபடை ரிசுக்காகிதம் சீட்டின் பின்புறமாக ஒட்டப்படுகிறது. சிலவேளைகளில் துண்டுதுண்டான ரிசுக் காகிதங்கள் சேர்த்து ஒட்டப்படுகின்றன. போலிக் கூப்பன் நடமாடுவதில் இவைகள் எல்லாம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைகள் யாவும் இனிமேற்பட்டு அணுப்பும் முயற்சிகளர்கக் கொள்ளப்படும். ஆனுல் சில்லறை வியாபாரிகள் ஒப்படைத்த பாதிச் சீட்டுகளை பூர்த்தியாக்குவதற்கு சீட்டுகளைக் குலைக்க அவசியம் நேரிட்டால் மொத்த வியாபாரிகள் அவ்வாறு செய்யலாம். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் சில்லறை வியாபாரியினுடைய முதற் புறக்குறிப்பு அவ்வாறு பூர்த்தியாக்க எடுத்துக்கொண்ட துண்டுகளில் இல்லாமலிருந்தால் மொத்தவியாபாரி அச்சில்லறை வியாபாரியின் லைசன்ஸ் இலக்கத்தைக் குறித்துக்கொண்டு கூப்பன் வங்கிக்குக் கொண்டுவரவேண்டும்.

3. மொத்த வியாபாரியிடம் ஒப்படைத்த திகதியைச் சில்லறை வியாபாரி சீட்டின் பின்புறத்தில் குறிக்கவேண்டும். மொத்த வியாபாரி கூப்பன்வங்கியில் தான் ஒப்படைத்ததிகதியை அவ்வாறே குறிக்கவேண்டும்.

ச். ஞெட்றிக்கோ
ஜவுளிக்கட்டுப்பாட்டதிகாரி
கொழும்பு, 8-11-45 (2539)


## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 134,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை :
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்

தினசரிப் பற்று வரவு :
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம் :
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம்,4 விகிதம், 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள் :
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன் :
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்

(2505)






—இதற்குப் பதிலாக வாங்குவதற்கு எவ்வளவு செலவாகுமென யோசித்துப் பாருங்கள்

இப்போது ஆடைகள் விற்கும் விலையில் வண்ணான் ஆடைகளைத் தோய்த்து பொத்தல்களை உண்டாக்கவிடுவது, பணத்தை வீண் விரயஞ் செய்தது போலாகும். இவ்விதமாக முரட்டுத்தனமாய் நாசமுண்டாக்கக்கூடிய முறையில் ஆடைகளை வெளுக்கவேண்டியதில்லை. சன்லைட் சோப்பினுல் ஆடைகளிலிருந்து மிருதுவாக அழுக்கை நீக்கிவிடலாம். சன்லைட்டில் சுய ஆற்றலுள்ள நுரையிருக்கின்றது. அதனுல் நூலிழைகளைப் பாதிக்காதவாறு அது அழுக்கைத் தூக்கி எடுத்துவிடுகிறது. சன்லைட் முறையில் ஆடைகளை வெளுக்க இன்றே ஆரம்பியுங்கள்; அதனுல் உங்கள் ஆடைகளை நீடித்து நிற்கச் செய்யுங்கள்


**உங்கள் வேலைக்காரனுக்குச் சன்லைட் சோப்பை உபயோகித்துப் பணத்தை மிச்சப்படுத்தும் முறையைக் கற்பியுங்கள்.**

1. ஆடைகளைத் தண்ணீரில் நன்ருக ஊற வையுங்கள்.

2. ஆடைகள்மீது—அழுக்குப் படிந்த இடத்தில் மேலதிகமாக — சன்லைட்டை நன்ருகத் தேய்க்கவும்.

3. சோப் ஆடைகளுள் செறியும்படி மிருதுவாகத் தப்புதல்வேண்டும். அவைகளை அடிக்க வேண்டாம். சன்லைட்டின் 'சுய ஆற்றலுள்ள' நுரை அழுக்கை இழக்கி எடுத்துவிடுகிறது.

4. நன்ருக அலசிக் கழுவவும். இப்பொழுது அழுக்கு சன்லைட் நுரையிலேயே இருக்கிறது. ஆனபடியால் எல்லாவற்றையும் அலசிக் கழுவி வெளியேற்றவும். நன்ருக அழுக்கடைந்த ஆடைக்கு இன்னெருமுறை சோப் போடவேண்டும்






சன்லைட் சோப்
ஆடைகளைப் பாதுகாக்கிறது

S. 71-169 LEVER BROTHERS (CEYLON) LIMITED


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NATIONALIST TAMIL WEEKLY

# THE EELAKESARI

Largest and most Influential Circulation in Ceylon & India

Vol. 16 | Chunnakam, Sunday Nov. 18, 1945 | No. 18

## சீனமீது அமெரிக்கர் மோகம்

### ஸ்ரீ பாஸ்டர் கண்டனம்

சீனாவில் இருக்கும் உள்நாட்டுத் தகராறில் அமெரிக்கா தலையிடுவதாகக் கூறும் 4 கடிதங்களை "நியூ சைனா டெய்லிநியூஸ்" என்னும் சீனக் கம்யூனிஸ்டுக் கட்சிப் பத்திரிகை முதல் பக்கத்தில் பிரமாதமாகப் பிரசுரித்திருக்கிறது. அமெரிக்கரைத் தலையிடாமல் இருக்க வேண்டுமெனப் பிரஸ்தாப 4 கடிதங்களும் அமெரிக்க ராணுவ அதிகாரிகளைக் கோருவதாகத் தினசரியிற் காணப்படுகின்றது.

சீன கம்யூனிஸ்ட் ராணுவ பிரதம சேனாதிபதியான ஜெனறல் சு-டெ-அமெரிக்க தளபதியான ஜெனரல் வெட், மேயருக்கு ஒரு கடித மெழுதி யிருக்கிறார். இக் கடிதம் இம்மாதம் 4-ம் திகதி எழுதப்பட்டிருக்கிறது. வடசீனாவில் நடக்கும் யுத்தத்தை விவாதிக்கும் இக்கடிதம் அமெரிக்கரைப்பற்றிக் கீழே வருமாறு கூறுகிறது.

அக்டோபர் 18-ந் தேதி 30 அமெரிக்கர், ஆயுதங்களைத் தாங்கிக் கொண்டு, ஹாப்பே கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைக் காரியாலயத்தை அடைந்தார்கள். பிறகு காரியாலயத்தைச் சூழ நின்றுகொண்டு சோதனை போட்டனர். இவ்வாறு சோதனைபோட இவர்களுக்கு உரிமை கிடையாது. டீன்ஸ்டினில் உள்ள காரியாலயத்தையும் இவர்கள் சோதனைபோட்டனர். 5 பேரைப் பிடித்துக்கொண்டுபோய் அமெரிக்க காரியாலயத்தில் கேள்வியும் கேட்டனர்.

அக்டோபர் 21-ந் திகதியன்று 10 அமெரிக்க விமானங்கள் பொது ஜனங்களையும் துருப்புகளையும் மெஷின்கன்பிரயோகம்செய்தன. ஹாப்பேயிலுள்ள ஆட்டீஸ் என்னுமிடத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. வெட்டவெளியான மைதானத்தில் ஜனங்களும் கம்யூனிஸ்ட் துருப்புகளும் கூடியிருந்த பொழுதே பிரஸ்தாப மெஷின்கன் பிரயோகம் நடந்தது. அமெரிக்க விமானங்கள் மெஷின்கன் பிரயோகம் செய்து இந்த நிராயுதபாணிகளைத்தாக்கியிருக்கின்றன. சீன மக்களின் ஆதிபத்திய உரிமையை அமெரிக்கர் இவ்வாறு மெஷின்கன் பிரயோகம் செய்ததின்மூலம் மீறிவிட்டார்கள். இது சீன உளநாட்டுத் தகராறில் நேரிடையாகத் தலையிட்டுப் பங்கெடுப்பதாகும்.

மஞ்சூரியாவி லிருக்கும் இங்கோவ் என்னும் நகரை வசமாக்க சியாங் துருப்புகள் புறப்பட்டன. ஆனால் இத்துருப்புகள் பிரஸ்தாப நகருக்குச் செல்லாமல் சிங் வாஸ்ட்டே என்னுமிடத்தில் இறங்கிவிட்டன. காரணம் இங்காங் நகரம் கம்யூனிஸ்டுகள்வசம் பிடிக்கப் பட்டு விட்டதாம். ஆகவே இங்கு சியாங் துருப்புகள் இறங்க வேண்டுமானால்எதிர்ப்பு இருக்கும்.

சுங்கிங்கிலுள்ள கம்யூனிஸ்டுக் கட்சிப் பிரதிநிதியான சோ-என் லாய் என்பவர் விடுதலையாகியிருக்கும் பிரதேசங்களுக்கு அயல்நாட்டு நிருபர்களை அனுப்ப வேண்டுமென்றும் அவர்களே அங்குள்ள நிலவரங்களை வந்து பார்க்கட்டுமெனவும் மத்திய அரசாங்கத்தை கேட்கப்போகிறார். அமெரிக்கத் துருப்புகள் உள்நாட்டு யுத்தத்தில் தலையிடுவது அப்பொழுது தெரிந்துவிடுமென கம்யூனிஸ்டுகள் கூறுகிறார்கள். அமெரிக்க துருப்புகளின் நடவடிக்கையால் ஏற்பட்டிருக்கும் சேதத்துக்கு நஷ்டஈடு கோரும் உரிமை தங்களுக்கு உண்டென்றும் கம்யூனிஸ்டுகள் கூறுகிறார்கள்.

சீனாவிலிருக்கும் 3000 விமானங்களை அமெரிக்கர் சியாங்குக்குத் தந்துவிடப் போவதாகவும் அவ் விமானங்களை அவர் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக உபயோகிப்பாரென்றும், சீனாவில் பிரசுரமாகியிருக்கும் செய்தி முழுப் பொய்யென அமெரிக்க ராஜாங்கம் மறுக்கிறது. அமெரிக்க ராஜாங்க அதிகாரிகள் கீழ்வருமாறு அறிவிக்கிறார்கள்:

முதலில் சீனாவில் அமெரிக்காவுக்கு 3000 விமானங்களிருப்பதாகக் கூறுவதே நிஜமல்ல. வேண்டுமானால் சில விமானங்களை சியாங் ராணுவத்தினருக்குக் கொடுத்திருக்கலாம். இது ராணுவ காரியங்களுக்காகவே கொடுக்கப் பட்டிருக்கும்.

சீனாவிலிருக்கும் அமெரிக்க அதிகாரிகளும் ரஷ்ய அதிகாரிகளும் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லை யென்று விலகிக் கொண்டுவிட்டால் சீன உள்நாட்டு யுத்தமே நின்றுவிடுமெனப் பிரபல அதிகாரிகள் அறிவிப்பதாக யு. பி. பிரஸ் நிருபர் எழுதுகிறார். இரு கட்சியாரும் தங்களுக்கு வெளி உதவி கிடைக்குமென நினைக்கிறார்கள். ஆகவே இது கிடைக்காது என்று தெரிந்துவிட்டால் சர்ச்சைகள் பூராவும் நின்றுவிடும். கீழ்க்கோடியில் அமெரிக்க ரஷ்ய தகராறு ஏற்படக் கூடாது என்பதே அமெரிக்காவின் கொள்கை. ஆனல் சீனாவில் நடந்திருக்கும் சமீப நிகழ்ச்சிகள் அமெரிக்கருக்குத் தெரியாமலே அவர்களைத் தவறில் வைத்து விட்டது.

அமெரிக்க காங்கிரஸ் சபையின் வெளிநாட்டுக் கமிட்டி ஒன்றில், கம்யூனிஸ்ட் கட்சி மெம்பரான ஸ்ரீ வில்லியம் பாஸ்டர் என்பவர் சாட்சியம் கொடுத்தார். அப்பொழுது பிரசிடென்ட் ட்ரூமனின் 12 அம்ச அறிக்கையைப் பார்த்தால் அவர் தீவிர ஏகாதிபத்தியவாதி என்றே தெரிகிறது என்று கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

சீனாவில் நடக்கும் காரியங்கள் அமெரிக்க பாரம்பரியக் கொள்கைக்கே நேர்மாறானது. சீனாவிலிருக்கும் நம் துருப்புகளை நாம் திருப்பியழைத்துவிட வேண்டும். அவ்விடமிருக்கும் அமெரிக்க தளபதியான ஜெனறல் வெட்மேயரை திரும்ப அழைத்துவிட வேண்டும். அவர் ராணுவத்துறையில் மிகவும் பிற்போக்கானவர். அதோடு அவ்விடமிருக்கும் அமெரிக்க ஸ்தானிகரான பாட்ரிக் ஜே ஹார்லியையும் திரும்ப அழைத்து விடவேண்டும்.

## நாவலர் வாரம்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களது தினம்' (26-11-45) கார்த்திகை மீ 11-ம் திகதியாகையால் 25-11-45 தொடக்கம் 1-12-45 வரையும் 'நாவலர் வாரமாக' கொண்டாடுமாறு தமிழ் மக்களையும், சைவ அன்பர்களையும், வாசிகசாலை முதலிய நூல் நிலையங்களையும், சங்கங்களையும் குருபூசை மடங்கள்—பாடசாலைகளின் அதிகாரிகளையும் அகில இலங்கைக் கருணைக்கழகத் தலைவர் கேட்டுக் கொள்ளுகின்றார்.

## ஜவஹரின் வீரகர்ஜனை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதையில் உள்ள தடைகள் யாவும் நீங்கிவிடும். நமது பிரச்னைகளை நாம் தீர்த்துக்கொள்ள முடியாமற்போய்விட்டால் உள்நாட்டுக் கலகம் தோன்றும் என்று சிலர் கூறுகிறார்கள். அப்படியே உள்நாட்டுக் கலகம் ஏற்பட்டால், அதைச் சமாளிப்பதற்கான வழிகளை நாம் கண்டுபிடிப்போம். லீக் கொள்கை இன்றோ அல்லது நாளையோ ஒரு சமரச ஏற்பாட்டுக்கு நாம் வரமுடியாதபடி செய்திருக்கிறது. லீக்குடன் சமரசம் செய்து கொள்ளவே முடியாது என்பதை நான் தெளிவுபடுத்தி விட விரும்புகிறேன். எல்லா இந்திய முஸ்லிம்களின் ஏகப்பிரதிநிதி முஸ்லிம் லீக்தான் என்று தவறாக நினைத்துக்கொள்ள வேண்டாம். நாமே நேரில் முஸ்லிம் மக்களை அணுகி அவர்களுடைய குறைகளைக் கேட்டு அவற்றை நிவிர்த்திக்கப் பாடுபடுவோம். முஸ்லிம் லீக் தனது முட்டுக்கட்டை போடும் தந்திரத்தால் தேசத்தின் அரசியல் வாழ்வையே பாழாக்கி விட்டது. ஆகையால், நமது நடவடிக்கைகளுக்கும் முஸ்லிம் லீக்குக்கும் வெகுதூரம். ஆனல், தேசத்தின் சுதந்திரத்திற்காகப் பாடுபட வேண்டுமென்று முஸ்லிம் லீக் கோரினால் அதன் கோரிக்கைக்கு நான் செவி சாய்ப்பேன்.

### விஞ்ஞாபனம் வெளிவரும்

"அடுத்த டிசம்பர் மாதத்தில் விரிவான தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்றை காங்கிரஸ் பார்லிமென்டரி போர்டு வெளியிடும். தேர்தலுக்குப் பிறகு காங்கிரஸ் செய்து முடிக்கவேண்டிய வேலைகள் பல இருக்கின்றன. பொருளாதார வாழ்வில் ஏற்பட்டுள்ள சீர்கேடுகள், நாளுக்கு நாள் பெருகிவருகிற மக்களின் வறுமை, உணவுப் பஞ்சம், மக்களிடையே கல்வியின்மை முதலியபல பிரச்னைகளைக்காங்கிரஸ் சமாளிக்கவேண்டும். இந்த பிரச்னைகளைக் காங்கிரஸ் தீர்த்துவைப்பது வரப்போகும் தேர்தல்களில் மக்கள் அதற்கு அளிக்கும் ஆதரவைப் பொறுத்தது. காங்கிரஸ் அபேட்சகர்களின் தனிப்பட்ட யோக்கியதையைக் கொண்டு மக்கள் அவர்களை மதிப்பிடக் கூடாது. கடந்த 25 வருடங்களாக நாட்டின் விடுதலைக்காகப் போராடும் ஸ்தாபனமான காங்கிரசின் பிரதிநிதிகளாக அவர்கள் தேர்தல்களிற் போட்டியிடுகிறார்கள் என்பதைத்தான் வாக்காளர்கள் கவனிக்க வேண்டும்."


### 'ஜெய் ஹிந்த்'

'ஜெய் ஹிந்த்' என்ற கோஷத்துடன் தமது பிரசங்கத்தை நேருஜி ஆரம்பித்து இந்தோனேசியாவில் நடக்கும் சுதந்திரப் போராட்டத்தை ஞாபகப்படுத்தினார். சுதந்திரப் பிரச்னையைப் பற்றி இந்தியா கிளப்பிய குரல் இன்று ஆசியாவின் மூலைமுடுக்குகளிலெல்லாம் எதிரொலிக்கிறது. இந்தியாவின் பரிபூரண அனுதாபம் இந்தோனேசியர்பால் இருப்பதாக அவர்களுக்கு நேருஜி உறுதி கூறினார்.



**உங்களது அழகுதரும் சோப்பை நீடித்து உழைக்கச்செய்யுங்கள் ..**

உங்களுடைய சருமத்தை ஏற்றவாறு கவனிக்காதுவிட்டால் உங்களுடைய வசீகர தோற்றம் பழுதடைந்து செல்லும் என்பதை நீங்கள் அறியவேண்டும். மேலும், சிலவேளைகளில் உங்களுக்குத்தேவையான லக்ஸ் டொயிலெட் சோப் எல்லாம் பெற்றுக்கொள்வது கஷ்டமாகும். ஆனபடியால் இந்தச் சுகந்த அழகுதரும் சோப்கட்டிகள் ஒவ்வொன்றையும் நீடித்து நிற்கச் செய்யவேண்டும். இந்த மூன்று முறைகளையும் கையாண்டால் இது இரட்டிப்பங்கு காலத்திற்கு இலகுவில் நின்றுபிடிக்கும்.



**உலரவைத்தல்:** உபயோகித்ததன்பின்னர் அதைக் கம்பிக்கூடை அல்லது அதுபோன்ற நீர்வடிக்கும் சிறுபாத்திரத்தில் வைக்கவும். இப்படியாக உலரவைத்தால் வீணாகத்தேய்ந்து அல்லது உடைந்துபோகமாட்டாது. மெல்லிய துண்டாக வரும்வரைக்கும் உபயோகிக்கலாம். **ஒருபோதும் தண்ணீருள் ஊறவிடவேண்டாம்.** சிறிதுநேரத்திற்காவது தண்ணீருள் சோப்கட்டியை வைக்கவேண்டாம்; தண்ணீரோடும் குழாயின் கீழும் வைத்திருக்கக் கூடாது. சோப் மிகவும் விரைவில் கரைந்துபோகிறது.

**புதியதில் பழையதை ஒட்டுதல்:** தேய்ந்துபோன சிறுதுண்டுச் சோப்பை ஒருபோதும் எறிந்துவிடக்கூடாது. பழையகட்டியில் மீந்திருப்பதைப் புதியதுடன்சேர்த்து ஒட்டிவிடுதல்வேண்டும்.—இரண்டையும் நனைத்து ஒன்றுடனொன்றைச் சேர்த்து அமர்த்தி சிறிதுநேரம் உலரவிடவேண்டும். இவ்விதம் தேய்ந்துபோன பழையசோப்கட்டியை இறுதிவரைக்கும் உபயோகிக்கமுடியும். இந்தமுறையில் எவ்வளவு சோப் மீதமாகிறதென்று நீங்கள் பிரமிப்பீர்கள்.




**லக்ஸ் டொயிலெட் சோப்**

சினிமா நட்சத்திரங்களின் அழகு சோப்

LEVER BROTHERS (CEYLON) LIMITED

ஐந்தாம் ஆண்டு புதிய தோற்றம்

**அணிகலம்**

(இலக்கியத் தமிழ் மாதப்பத்திரிகை)

**கண்கவர் வனப்புமிக்க** முகப்புடன், அறிஞர் பலரின் கவிதை, கதை, கட்டுரைகளுடன் தமிழ் மாதம் **முதல் தேதி வெளிவருவது**

தனிப்பிரதி 15 சதம். வருடசந்தா (மலர் உட்பட) ரூ. 2-50

இலங்கையில் முக்கிய நகரங்களில் டிபொஸிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை

'அணிகலம்' ஆபீஸ், புதுக்கோட்டை — சேர்குலேஷன் மனேஜர்

[2458]

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு 'திருமகள் நிலையம்' நா. பொன்னையா அவர்களால், சுன்னாகம், திருமகள் அழுத்தகத்தில், 1945-ம் ஆண்டு நவம்பர் மீ 18 ம் உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Supplement to the Eelakesari of 18-11-45

# 'ஈழகேசரி' மலாயா அனுபந்தம்

## வடஇலங்கைச் சுருட்டுத்தொழிலாளர் சங்கம்

வட இலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் இரண்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் மங்கையர்க்கரசி வித்தியாசாலை மண்டபத்தில் பிரஸ்தாப சங்க உபதலைவர் வழக்கறிஞர் வி. சோமசுந்தரத்தின் தலைமையில் நடைபெற்றது.

தொழிலாளர்களுக்காகப் பாடுபட்டுவந்த நியாயவாதி வி. சிற்றம்பலத்தின் அகால மரணத்துக்காக அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

திரு. வி. சோமசுந்தரம் தலைமைப் பிரசங்கத்தில் கூறியது: கடந்த சில மாதங்களாக யாழ்ப்பாணத்தில் கடுமையான வகுப்புவாத வெறி தாண்டவமாடி வந்தது. சிங்களவரை ஈவு இரக்கமின்றித் தாக்கிவந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசில் கலந்துகொள்ளாமற் சிலர் வெளியில் நின்றனர். காங்கிரசுக்கு 'சிலோன் டைம்ஸ்' பத்திரிகை வெட்கமில்லாமல் உதவியளித்துவந்தது. ஆனால் வெள்ளை அறிக்கை பிரசுரிக்கப்பட்டபின் வகுப்புப் பூசலை ஒழித்து புதிய அரசியல் திட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு பெரும்பான்மை மக்களோடு ஒத்துழைக்கும்படி அப்பத்திரிகை புத்தி புகட்டியது.

"ஜாதி மத குல பேதமின்றி எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒத்துழைப்பதினாலேயே இலங்கை மக்கள் விமோசனமடையலாம். ஆசியாவின் பல்வேறு பகுதிகளிலும் அடிமை வாழ்க்கையை அனுபவித்துவரும் மக்கள் சுதந்திரத்துக்காக ஓலமிடும் சத்தம் எங்களுக்குக் கேட்கிறது. இலங்கைத் தொழிலாளரும் அவ்வாறே ஐக்கியப்பட்டு இலங்கையின் விடுதலைக்காகப் போராடும் காலம் கிட்டிவிட்டது."

லங்கா சமசமாஜக் கட்சியின் பிரதிநிதியாகக் கூட்டத்துக்கு விஜயம் செய்த திரு. லயனெல் கூரே பின்பு பேசுகையில் ஸோல்பரி அரசியல் திட்டத்தைக் கண்டித்தார். ஸோல்பரி திட்டம் பிற்போக்கானது என்று அவர்கூறினார்.

பருத்தித்துறை வழக்கறிஞர் திரு. ஸி. தர்மகுலசிங்கம் பேசுகையில் அரசியல் சீர்திருத்தம் சம்பந்தமாக வெள்ளை அறிக்கை செய்திருக்கும் சிபார்சை நிராகரித்து விடும்படி ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தார்.

திரு. டி. எஸ். சேனநாயகாவும், திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் பிரிட்டிஷாரை நம்பியிருக்கிறார்களென்று கூறி வழக்கறிஞர் பொ. நாகலிங்கம் அப்பிரேரணையை ஆமோதித்தார். தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

யாழ்ப்பாணம் பட்டின சபை அங்கத்தவர் திரு. சாம் ஏ. சபாபதி பேசுகையில் மூன்றுவது பேர்வழியாகிய பிரிட்டிஷ்காரர் நமக்கு அளிக்கும் அரசியல் திட்டத்தால் இலங்கையர் முன்னேற முடியாதென்றும் பிரிட்டிஷ் எஜமானரின் தலையீட்டை நிராகரிப்பதனால்தான மக்களுக்கு விமோசனமுண்டென்றும் கூறினர்.

## இப்போது தாய்ப் பாஷை வேண்டாம்

### யாழ்ப்பாணம் பட்டின சங்கத்தின் தீர்மானம்

இலங்கையில் சிங்களமும் தமிழும் உத்தியோக பாஷையாக வைத்துக்கொள்வதுபற்றி அபிப்பிராயம் தெரிவிக்குமாறு ஸ்தலஸ்தாபன கமிஷனர்விடுத்த ஒருகடிதம் யாழ்ப்பாணம் பட்டின சபையின் மாதாந்தரக் கூட்டத்தில் ஆலோசனைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

சிங்களமும் தமிழும் உத்தியோகபாஷையாக இருப்பதைத் தாம் வரவேற்பதாகவும் ஆனால் இச்சந்தர்ப்பத்தில் அதை நடைமுறைக்குக் கொண்டுவருவது முடியாத காரியமென்றும் கூறி திரு. எஸ். பதஞ்சலி ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தார். திரு. ஜே. பட்றிக் அதை ஆமோதித்தார்.

திரு. சாம் சபாபதி தமிழில் பேசும்பொழுது அப்பிரேரணையை எதிர்த்தார். பெரும்பான்மை வோட்டுகளால் அத்தீர்மானம் நிறைவேறியது.

## இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் துருப்புகள்

### பிரிட்டிஷ் சுயேச்சை தொழிற்கட்சி கோரிக்கை

இந்தோ சைனாவிலும் இந்தோனீஷியாவிலுமுள்ள எல்லா ஐரோப்பியப் படைகளும் இந்தியா, இலங்கை, பர்மா ஆகிய நாடுகளிலுள்ள எல்லா பிரிட்டிஷ் படைகளும் மீட்கப்பட வேண்டுமென்று பிரிட்டிஷ் சுயேச்சை தொழிற்கக்ஷியின் தேசிய சபை 11-ந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானமொன்றை நிறைவேற்றியிருக்கிறது. குடியேற்ற நாடுகளிலும் அட்லாண்டிக் சாசனம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்றும் அத்தீர்மானம்கூறுகிறது.

## அகில இலங்கை மலாய கொங்கிரஸின் தீர்மானம்

அகில இலங்கை மலாய கொங்கிரஸின் காரியக் கூட்டமொன்று சமீபத்தில் நடைபெற்றபோது ஸோல்பரி கொமிஷனர்களின் அறிக்கை இலங்கையை இறுதியில் உள்நாட்டுச் சுயாட்சிக்கு இட்டுச் செல்வதாக இருப்பதால் அதனை ஏற்றுக்கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்துக்கு டொக்டர் டிரஹ்மான் தலைமைவகித்தார்.

இலங்கையின் சுதந்தரத்துக்காக தாங்கள் சபை முதல்வர் திரு. டீ. எஸ். சேனநாயகாவுடன் பூரணமாக ஒத்துழைப்பதாக வாக்களிக்கிறதென்றும் அந்தக் கூட்டம் தீர்மானித்தது.

கூட்டத்தின் தீர்மானத்தில் மேலும் சொல்லப்பட்டிருப்பதாவது:—

"வேகமாகப் பரவிவரும் தேசியமனப்பான்மையை கொமிஷனர்கள் கௌரவித்திருக்கின்றனர். இத்தோடு சோனகரும் மலாயரும் சேர்ந்துதான் முஸ்லீம்கள் என்று அழைக்கப்படுகின்றனரென்பதைகொமிஷனர்கள் தெளிவாக்கியிருக்கிறார்கள். இதன் மூலம் மத அடிப்படைப் பிரதிநிதித்துவத்தை அவர்கள் நிராகரித்திருக்கின்றனர். முஸ்லிம்களின் ஐக்கியம் என்ற கோரிக்கையை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மலாயர்களாகிய நாம் முஸ்லிம்களாக இருப்பதையிட்டுப் பெருமையடைகிறோம். ஆனால் அந்தப்பெருமை நமது தேசியத்துக்கு முட்டுக்கட்டையாக இருக்க மாட்டாது. முஸ்லிம்களின் ஐக்கியம் நமது லட்சியமல்ல. ஆனால் இலங்கையின் சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்வதில் தேசிய ஐக்கியம்தான் நமது லட்சியம்.

தற்போதிருக்கும் நிலைமையில் தொகுதிகள் பிரிக்கப்பட்டால் மலாய்ப் பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்படமாட்டார்களென்று நாம்கவலையடைகிறோம். ஆதலின் கீழ்ச்சபைக்கு இரு மலாயர்கள் பிரதிநிதிகளாக நியமிக்கப்படவேண்டுமென்ற நமது கோரிக்கையை நாம் வற்புறுத்துகிறோம்

### தமிழ்க்காங்கிரஸின் கண்டனம்

தமிழ்க் காங்கிரஸின் கமிட்டிக்கூட்டமொன்று நேற்று முன்தினம் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் தலைமையில் நடைபெற்றபோது வெள்ளையறிக்கையை அரசாங்கசபையில் அவசரமாக விவாதிக்க ஏற்பாடுசெய்து அதன் மூலம் பூரண பொதுஜன அபிப்பிராயம் பெற்றுக்கொள்ள இடமளிக்காததற்காக திரு. சேனநாயகாவையும் மந்திரி சபையையும்கண்டித்து ஒருதீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையில் இருக்கும் வேற்றுமைகளை சமரஸமாகத் தீர்த்துக்கொள்ள அவகாசமளிப்பதற்காக விவாதத்தைச் சிலகாலத்துக்கு ஒத்திவைக்குமாறு தமிழ்க்காங்கிரஸ் காரியதரிசிகள் விடுத்த கோரிக்கையை திரு. சேனநாயகா ராஜதந்திரமற்றமுறையில்நிராகரித்ததற்காக வருத்தந்தெரிவித்தும்ஒருதீர்மானம்அக்கூட்டத்தில்நிறைவேற்றப்பட்டது.

தற்போதிருக்கும் அரசியல் திட்டத்தின்படியே அரசாங்கசபையைக் கலைத்துப் புதிய தேர்தல்கள் நடத்தவேண்டுமென்றும் வற்புறுத்தி மற்றோர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### யாழ்ப்பாண நூதனசாலை

யாழ்ப்பாணம்நூதனக் காட்சிச் சாலைக்கு ஒரு மேலதிகாரியை நியமிக்க தான் கொண்டுவரவிருக்கும் அடையாள மானியமொன்றை அரசாங்கசபை அங்கீகரிக்க வேண்டுமென கல்வி மந்திரி கோருகிறார்.

### பட்டமளிப்பு விழா

நேற்று முன்தினம் கொழும்பு பல்கலைக் கல்லூரி பட்டமளிப்பு விழாவின்போது டாக்டர் போல் பீரிஸ் பட்டமளிப்பு விழாப் பிரசங்கம் நிகழ்த்தினார். அப்போது ஒரு தேசத்தின் கலாசாரம் கல்வி அபிவிருத்தியினால் எவ்விதம் பரிபக்குவம் அடைகிறது என்றும், கல்வியில் மதபோதனை அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார் அத்தியக்ஷகர் என்ற முறையில் மே. த. கவர்னர் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். சுமார் 125 மாணவ மாணவிகளுக்குப் பட்டங்கள் வழங்கப்பட்டன.

### இலங்கையிற் புதிய பாராளுமன்றக் கட்டிடம்

இப்போது இருக்கும் அரசாஙகசபைக் கட்டிடம் வரப் போகும் புதிய இலங்கைப் பாராளுமன்றத்துக்குப் போதுமானதாக இருக்காது என்று கருதப்படுவதால் மந்திரிசபையினர் புதிய பார்லிமெண்டுக் கட்டிடம் கட்டுவதற்குரிய சரியான இடம் ஒன்றைக் கொழும்பில் தெரிந்தெடுக்க ஆலோசனை செய்துவருகிறார்கள் என்று தெரிகிறது.

## க்ஷயரோகத் தடை நடவடிக்கை

### சுகாதார மந்திரியின் புதிய முயற்சி

நாட்டில் க்ஷயரோகத்தை ஒழிக்க எடுத்துக்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றிப் பரிசீலனைசெய்ய நியமிக்கப்பட்ட க்ஷயரோகக் கமிட்டியின் சிபார்சுகளை நடைமுறைக்குக்கொண்டுவரச் சுகாதாரமந்திரி முயற்சி செய்ய ஆரம்பித்துவிட்டா ரென்று தெரிகிறது.

இருதயநோய் ஏதாவது இருக்கிறதாவென்று ராணுவத்தில் சேர வருபவர்களைப் பரிசோதனை செய்வதற்காக உபயோகப்படுத்தப்படும் ரேடியோ கருவியொன்றை இந்தியாவிலுள்ள ராணுவ அதிகாரிகளிடமிருந்துபெறச் சுகாதார மந்திரி பாடுபட்டு வருகிறாரென்று தெரிகிறது. அப்படி இக்கருவி கிடைக்குமானல் க்ஷயரோகம் இருக்கிறதா இல்லையாவென்பதைக் கண்டு பிடிக்க இது உபயோகப்படுத்தப்படும். இக்கருவியைப் பிரயோகிப்பதற்கு வேண்டிய நிபுணரொருவரையும் பெற மந்திரி முயற்சி செய்து வருகிறார்.

இதற்கிடையில் இத்துறையில் கொழும்பு நகரசபையின் உற்சாகம் மிகவும் குறைந்துவிட்டது. இதில் அதிக சிரத்தை ஏற்படுவதற்கான அறிகுறியொன்றையும் காணேம்.

## கொழும்புத்துறைமுக தொழிலாளர் வேலை நிறுத்தம்

கொழும்புத் துறைமுகத்தில் வேலைசெய்துவரும் தொழிலாளர்களில் சுமார் 500பேர் வேலைநிறுத்தம் செய்துகொண்டுவிட்டார்கள். இந்த வேலைநிறுத்தத்தின் விளைவாக கொழும்பு துறைமுகத்தில் இறக்கப்படவேண்டிய அதிகமான உணவுப் பொருள்கள் அப்படியே கப்பலில் இருக்கின்றனவென்று அறியப்படுகிறது. வேலை நிறுத்தம் செய்துகொண்ட சில தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

இலங்கை நெருப்புப்பெட்டி கம்பெனித் தொழிலாளர் வேலை நிறுத்த நிலைமையில் மாற்றமொன்றும் ஏற்படவில்லை.

## இரண்டடுக்கு பஸ்

### கொழும்பு வீதியில் ஓடப்போகின்றது

மேல் தட்டுடன் சேர்ந்த பஸ் வண்டிகள் வெகு விரைவில் கொழும்பு வீதிகளில் ஓடப்போகின்றன. இத்தகைய முதலாவது பஸ் இப்போது லண்டனில் பூர்த்தியாகி விட்டது. லண்டனில் உள்ள ஆங்கிலத்தினசரி ஒன்று அதே பஸ் வண்டியின் படத்தைத் தாங்கி வெளிவந்திருக்கின்றது. இலங்கையில் இதுபோன்ற பஸ் இதுவரை ஒருபோதும் ஓடவில்லை.

## ஜப்பானின் அரசியலமைப்பு

புதிய ஜப்பானிய அரசியல் அமைப்பு ஏறக்குறைய பிரிட்டிஷ் அரசியல் அமைப்பில் இருக்குமென்று அரசியல் திட்டத்தைத் திருத்தியமைக்க நியமிக்கப்பட்ட ஜப்பானிய கமிட்டியின் தலைவரும், ஜப்பானிய மந்திரியுமான டாக்டர் ஸூனிச்சி மட்ஸூமொடோ நவம்பர்மீ 15உ ரோய்ட்டரிடம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:- 'அமெரிக்கா, பிரிட்டன், ருஷியா, அயர்லாந்து ஆகிய தேசங்களுட்பட பல்வேறு நாடுகளின் அரசியல் திட்டங்களை இப்போது நாம் ஆராய்ந்துவருகிறோம். பிரிட்டனைப் போலவே ஜப்பானிலும் ஒரு அரசகுடும்பம் இருப்பதனால் நாம் அரசியலமைப்பினுள் நுழைக்க விரும்பும் பல அம்சங்கள் பிரிட்டிஷ் அரசியல் அமைப்பில் இருக்கலாம். நமது புதிய அரசியலமைப்பு ஜனநாயக ரீதியில் அமைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தற்போது சக்கரவர்த்தி நடந்து வருவதைப் போலன்றி மேலுமதிகமாக பாராளுமன்றத்தை கலந்து கொள்ள வேண்டியிருக்கும். அப்படியானல் இப்போது சக்கரவர்த்தியின் குடும்பம் மறைந்திருப்பதுபோல் இருக்கமுடியாது. பிரிட்டிஷ் அரச குடும்பத்தைப்போல் நமது அரச குடும்பமும் அடிக்கடி வெளியில வந்து பொது ஜனங்களுக்குத் தரிசனம் கொடுக்கவேண்டியிருக்கும். பெப்ரவரிமாதம் நமதுபுதிய அரசியல் திட்டத்தின் பிரதியைச் சக்கரவர்த்தியிடம் சமர்ப்பிக்கலாமென்று நான் நினைக்கிறேன்'

ஜெனரல் மக்கார்தரின் தலைமைக் காரியாலயத்தில் பிரிட்டிஷ் பிரதமமந்திரி திரு. அட்லியின் பிரதிநிதியாக இருக்கும் லெப்டினன்ட் ஜெனரல் சார்ள்ஸ் கார்டினர் நேற்றிரவு லண்டனிலிருந்து டோக்கியோவுக்குத் திரும்பிவந்தார். ஜப்பானில் எவ்வளவு பிரிட்டிஷ படைகள் வைக்கவேண்டுமென் பதுபற்றி அவர் பிரிட்டிஷ் அரசாங்காத்துடன் விவாதிக்க லண்டனுக்குச்சென்றிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7 - மீன்பிடிவள்ளங்கள் நாசம்

### இருவர்மீது வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணத்தில் லைடன் தீவைச் சேர்ந்த மண்கும்பான் என்னுமிடத்தில் திமிலர் என்று சொல்லப்படும் மீன்பிடிகாரருக்குச் சொந்தமான 7 மீன்பிடி வள்ளங்களைத் தீமூட்டி எரித்துவிட்டதனால் திமில வகுப்பாரிடையே மிகுந்த பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

லைடன் தீவைச் சேர்ந்த மண்கும்பான் என்ற இடத்தில் திமில வகுப்பைச் சேர்ந்த சுமார் 400 பேர் யாழ்ப்பாணம் பொலீஸில் இதுபற்றி முறையிட்டிருக்கின்றனர். குறைந்த விலைக்குத் தங்களுக்கு மீன் கொடுக்கும்படி செய்யும்படி வேளாளர் தங்களைக் கேட்டதாகவும் அதற்குத் தாங்கள் மறுத்துவிட்டதாகவும் இதன் காரணமாக இரு வகுப்பாருக்குமிடையில் சிலகாலமாக மனஸ்தாபமிருந்து வந்ததாகவும் அவர்கள் பொலீஸில் தெரிவித்தனர்.

திமிலருக்குச் சொந்தமான மீன்பிடி வள்ளங்களை எரித்துவிட்டதனால் அவர்களுக்கும் வேளாளருக்குமிடையிற் சிறு சண்டைகள் ஏற்பட்டன. ஏழு மீன்பிடி வள்ளங்களும் 4500 ரூபாய் பெறுமதியிருக்குமென்று சொல்லப்படுகிறது. இந்தச் சம்பவம் நடந்த பிறகு திமிலர் மீன் பிடிக்கப்போக முடியாமலிருக்கிறதென்றும், அவர்கள் மீன் பிடிக்கப்போகும் முக்கிய இடங்களிற் பயங்கர ஆயுதங்களுடன் வேளாளர் தங்களிற் சிலரை ஆங்காங்கே நிறுத்தித் தாக்குவதாகப் பயமுறுத்திவருகின்றனரென்றும் சொல்லப்படுகிறது.

தொந்தரவுகள் மேலும் ஏற்படாமல் தங்களைப் பாதுகாத்துத் தரும்படி திமிலர் பொலீசாரைக் கேட்டுக்கொண்டனர்.

ஊர்காவற்றுறைப்பொலிசார் இது விஷயத்தை நன்கு விசாரணை செய்து மீன்பிடி வள்ளங்களை எரித்ததாக கூறப்படும் மண்கும்பான் வாசிகளான இரண்டு வேளாளர் மீது குற்றஞ்சாட்டி ஊர்காவற்றுறைக் கோர்ட்டில் ஒரு வழக்குத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

## சியாமிற்கு விசேட தூது

இலங்கையில் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக இருக்கும் திரு. எம். எஸ். ஆனே சியாமிலுள்ள இந்தியரின் நிலைமைபற்றி பரிசிலனை செய்யவும், ஜப்பானியரோடு சேர்ந்து கொண்டார்களென்று கூறப்படும் அங்குள்ள இந்தியர்களைப் பற்றிய பிரச்னைகளைத் தெரிந்து கொள்வதற்கும் சியாமிற்கு விசேஷ தூதாகப் போகப் போகிறார். இந்திய அரசாங்கத்தின் வெளிநாட்டு விவகார பகுதியின் உதவிக் காரியதரிசி திரு. தயாளும் திரு. ஆனேயுடன் பாங்கொக்கிற்கு செல்வதற்காக கண்டியில் காத்துக்கொண்டிருப்பதாகப் புது டில்லிச் செய்தி கூறுகிறது.

போஸ் சேனையைச் சேர்ந்தவர்களும், இந்திய சுதந்திர லீக்கைச் சேர்ந்தவர்களும், கைது செய்யப்பட்டிருப்பவர்களும் மற்றும் இந்திய சிவிலியன்களுமாக யுத்தத்தின் போது சியாமில் சுமார் ஒரு லட்சம் இந்தியர் இருந்தார்கள்.

# இலங்கைச் சர்வகலாசாலை

## கட்டிட விருத்தி

பேராதனையில் இலங்கைச் சர்வகலாசாலைக்கு வேண்டிய கட்டிடங்கள், பாலங்கள், விளையாட்டு மைதானங்கள் முதலியவைகள் அமைக்கும் வேலைகளைத் துரிதப்படுத்த முயற்சி செய்யப்படுகிறது. இவ்வேலைகள் யுத்தம் காரணமாகக் காலதாமதத்திற்குள்ளாகிவிட்டன.

புதிய லண்டன் நிர்மாணகர் சேர். பாட்ரீக் அபர்கிரோம்பியை இலங்கைக்கு மீண்டும் விஜயஞ்செய்து சர்வகலாசாலைக் கட்டிட நிர்மாணம் சம்பந்தமாக ஆலோசனை கூறும்படி அதிகாரிகள் கேட்க உத்தேசித்திருக்கிறார்களென்று தெரிகிறது. சேர். அபர்கிரோம்பியும், திரு. கிளிபோர்ட் ஹாலிடேயும் சேர்ந்தே 1940-ம் ஆண்டில் இலங்கைச் சர்வகலாசாலைக் கட்டிட அமைப்புக்குத் திட்டம் வகுத்தனர்.

இத் திட்டத்தைக் காலதாமதமின்றி பூர்த்திசெய்ய மராமத்து இலாகா மந்திரி திரு ஜே. எல். கொத்தலாவலை பாடுபடுகிறார். இலங்கை சர்வகலாசாலைக் கட்டிட நிதியிலிருந்து இதற்காக 1,500,000 ரூபா செலவழிக்க அனுமதி கோரி திரு. கொத்தலாவலை சமீபத்தில் அரசாங்கசபையில் ஒரு பிரேரணை கொண்டு வருவாரென்று தெரிகிறது.

சர்வகலாசாலைக்கு வேண்டிய கட்டிடங்களைத் தவிர விளையாட்டு மைதானங்கள் வீதிகள், பாலங்கள் முதலியவைகள் அமைப்பதும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

சர்வ கலாசாலைக் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டிய இடங்களைச் சில வருடங்களுக்கு முன்பு ராணுவத்தினர் தங்களுடைய உபயோகத்துக்கு எடுத்துக் கொண்டனரென்பதை அனைவரும் அறிவர். ராணுவத்தினர் அங்கு பல கட்டிடங்கள் கட்டியிருக்கின்றனர். இக் கட்டிடங்களை போக்குவரத்துப்பகுதிமந்திரி நிதிக் காரிய தரிசி, இலங்கை சர்வகலாசாலை உப அத்தியக்ஷகர் ஆகியோர் சமீபத்தில் பார்வையிட்டதுடன் சர்வகலாசாலைக்கு இவைகள் பிரயோசனப்படுமா வென்பதுபற்றி நன்கு விவாதித்தனரென்றும் தெரிகிறது.

நிரந்தரமாகக் கட்டிடங்கள் கட்டப்படும்வரை இக்கட்டிடங்களைச் சர்வகலாசாலை உபயோகப்படுத்திக் கொள்ளலாமென்று உப அத்தியக்ஷகர் கருதுகிறாரென்று தெரிகிறது. 1948-ம் வருட ஆரம்பத்தில் சர்வகலாசாலையின் பெரும் பாகத்தைக் கொழும்பிலிருந்து பேராதனைக்கு மாற்றிவிட முடியுமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

சர்வ கலாசாலையின் மொத்த கட்டிடச் செலவு 35,000,000 ரூபா ஆகுமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

## கொழும்பிற் கண்டனக் கூட்டம்

1945-ம் வருடம் நவம்பர் மாதம் 6-ந் திகதி மாலை 4 மணிக்கு இந்துக்களின் கூட்டம் ஒன்று கொழும்பு கொச்சிக்கடைத்தெரு ஸ்ரீ தம்பையா முதலியார் சத்திரத்தில் திரு S. சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமையிற் கூடியது. இக் கூட்டத்தின் நோக்கம் இப்போது சென்னை அரசாங்கத்தால் விலக்கப்பட்ட இந்து தேவாலயங்களையும் மடங்களையும் கட்டுப்படுத்திக் கொண்டு வந்திருக்கும் ஏற்பாட்டினைச் சட்டமாக்கக் கூடாதெனத் தங்களுடைய கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்வதே. இது சம்பந்தமான தீர்மானம், சபையோரால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இவ்வேற்பாட்டின் கருத்தென்ன? இதனால் எப்படி நமது புராதன இந்து மதத்திற்கு ஆபத்து நேரக்கூடும்? என்னும் விஷயம்பற்றி திரு. N. L. இராமசாமி ஐயரும், திரு. ஆறுமுகமும் விரிவாகப் பேசினர். இலங்கையில் தென்னிந்திய தேவாலயங்களுக்கு ஏராளமான ஆதனங்கள் இருப்பதனாலும் அவைகளெல்லாம் புகுத்தப்படும் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு எந்த நோக்கத்திற்காக அவைகள் கொடுக்கப்பட்டனவோ அந்த நோக்கத்திற்கு நேர்மாறான காரியங்களுக்கு இவை உபயோகப் படுத்தப்படும் என்ற பயம் இலங்கை இந்துக்களுக்கு ஏற்படுவதாலும் சென்னை தேசாதிபதியை ஜனப் பிரதிநிதிகள் இல்லாத சமையத்தில் மேற்சொன்ன ஏற்பாட்டினை ஜனநாயகமுறைக்கு விரோதமாக ஆதரவு கொடுக்கக் கூடாதென்று தந்திமூலம் வேண்டப்பட்டது.

## நெருப்புப்பெட்டிக் கம்பெனித் தொழிலாளர் வேலை நிறுத்தம்

### 500 பேர் வரை கலந்துகொண்டனர்

கூலி கூட்டிக் கொடுக்கும்படி களனியிலுள்ள நெருப்புப்பெட்டிக் கம்பெனியில் வேலைசெய்யும் சுமார் 500 தொழிலாளிகள் திங்கட்கிழமை வேலை நிறுத்தம் செய்தனர்.

தொழிற் கமிஷனர் அடுத்த சனிக்கிழமை கம்பெனி மானேஜருக்கும் யூனியனின் பிரதிநிதிகளுக்குமிடையில் ஒரு மகாநாடு கூட்டமுன் அறிவித்தலில்லாமலே அவர்கள் நேற்று வேலை நிறுத்தம் செய்தனர். அவர்களுக்குக் கொடுக்கப்படும் அடிப்படையான கூலியைக் கூட்டித் தரும்படி சிலர் கோருகின்றனர். யுத்த அலவன்சைக் கூட்டியும் ஓவர்டைம் கூலி கொடுக்கும் படியும், நாளொன்றுக்கு 8 மணி நேரம் வேலை செய்யலாமென்றும் வருடத்தில் இரண்டுவார லீவு கொடுக்கவேண்டுமென்றும் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

### சிங்கப்பூரில் தெ. கி. ஆ. ராணுவபீட மாற்றம்

இப்போதுகண்டியில் தென்கிழக்கு ஆசியா ராணுவ பிரதம தளபதியின் தலைமைஸ்தானம் இருக்கிறதல்லவா? இது இம்மாதம் 25உ ஞாயிற்றுக்கிழமையுடன் பூர்த்தியாய்விடும். இந்தஸ்தாபனம் சிங்கப்பூரில் அமைக்கப்பட்டு இருந்து அங்குமாற்றப்பட்டு வரும் செய்தி நேயர்களுக்கு மறந்து போயிருக்காது. 5-ந் தேதியே [illegible]

## யாழ்ப்பாணக்கு முனிஸிபாலிட்டி

இலங்கை அரசாங்கம் ஸ்தலஸ்தாபன பகுதி கமிஷனரிடமிருந்து கிடைத்த பின்கண்ட கடிதத்தை வடமாகாண அதிபர், யாழ்ப்பாண பட்டின சபைத் தலைவருக்கு அனுப்பியிருக்கிறார்:-

"யாழ்ப்பாண பட்டினசபை அங்கத்தினர்களின் தூதுக் கோஷ்டி யொன்று யாழ்ப்பாணத்தில் சில தினங்களுக்கு முன் இலங்கை அரசாங்கம் ஸ்தலஸ்தாபனப்பகுதி மந்திரியைப் பேட்டிகண்டது. யாழ்ப்பாண நகரசபை நல்ல முறையில் நடைபெறவேண்டுமானால், அதற்குச் சென்ற அக்டோபர் 5-ம் தேதி அரசாங்கம் அறிக்கையில் வெளியான மாதிரி விதிகள் பயனற்றவையென்றும் எல்லா நகரசபைச் சட்டங்களும் ஒன்றாக்கப்படுவது அவசியமென்றும் பட்டினசபையார் முறையிட்டுக்கொண்டனர். இம்முறையீட்டை மந்திரி ஆதரித்தார். நகரசபைச் சட்டங்கள் எல்லாம் ஒன்றாகப்படுவது அவசியம் தானென்றும், இது சம்பந்தமாக 1946 ஜனவரி ஆரம்பத்தில் அரசாங்சபையில் ஒரு சட்டம் கொண்டுவரத் தாம் உத்தேசித்திருப்பதாகவும், அதன்படி 1947 ஜனவரிமுதல் யாழ்ப்பாணத்தில் நகரசபை அமைக்கப்படுமென்றும், அது ஒன்றாக்கப்பட்ட சட்டங்களின் கீழ் அமைக்கப்படலாமென்றும் கனம் மந்திரி உறுதிகூறினார். இவ்விஷயம்பற்றி ஸ்தலஸ்தாபன சட்டம் எழுதும் அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதேசமயத்தில் நீங்கள் யாழ்ப்பாண பட்டினசபைத் தலைவரிடம் கலந்தாலோசித்து, யாழ்ப்பாண நகரப் பகுதியை மேற்கண்ட நகரசபைக்கு ஏற்றதாக 15 பிரிவுகளாகப் பிரிக்கத்தக்க யோசனைகளைச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நகரப் பகுதியை விஸ்தரிப்பது அவசியமில்லை. உங்கள் யோசனைகள் எனக்கு டிஸம்பர்மீ 15உக்குமுன் கிடைத்துவிடவேண்டும்."

## நியாயவாதி வீட்டிற் களவு

இம்மாதம் 6-ந் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணப் பிரிவு நீதிமன்றத்தில் புலோலி மேற்கு பொன்னர் சுப்பிரமணியம் என்பவர்மீது அவ்வூர் நியாயவாதி திரு. K. S. இராஜேந்திரம் என்பவருக்குச் சொந்தமாகிய வீட்டுக் கதவை உடைத்ததாகவும் அவருக்குச் சொந்தமாகிய ரூபா 350ஐக் களவெடுத்ததாகவும் இருவித குற்றஞ்சாட்டிப் பருத்தித்துறைப் பொலிசாரால் தொடரப்பட்டவழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்காளி சார்பாக திரு. A. V. குலசிங்கம் விவாதித்தார்கள். எதிரி விசாரணைக்குத் தான் ஆயத்தமில்லையென்றும், தவணை தரும்படியும் தெரிவித்தார். நீதிபதி அநுமதியளிக்காமையால் எதிரி விசாரணை முடியும்வரையும் அழுது கொண்டு நின்றார்.

திரு. K. S. இராஜேந்திரம் கூறியதாவது: சென்ற 9 வருட காலமாக நியாயவாதித் தொழில் புரிந்து வருகிறேன். எதிரி என் சொந்தக்காரன். அவர் வண்டி செலுத்துந் தொழிலுடையவர். சென்ற மார்ச்மீ 27-ந் திகதி நான் வீட்டிலில்லாத சமயம், வீட்டில் வேறெவரும் இல்லை என்பதை எதிரி அறிந்துகொண்டு வந்து கூரையைப் பிரித்தும் கதவை யுடைத்தும் உட்பிரவேசித்துப் பெட்டகத்துள்ளிருந்த ரூபா 350ஐயும் அபகரித்துச் சென்றுவிட்டார். முதலில் நான் இவர்மீது சந்தேகம் கொள்ளவில்லை. பொலீசாரிடம் அறிவித்த சில நாட்களின் பின், அல்வாய் வாசிகளாகிய இ. கந்தையா. ச. சிவராசா என்பவர்கள் இவரைக் குறித்த தினத்தில் எனது வீட்டுப்படலையால் ஏறிக்குதித்ததைக் கண்டதாகச் சொன்னார்கள். கடந்த சித்திரை மாதம் 13 திகதி இவரை வேலையினின்றும் நீக்கிவிட்டேன்.

விசாரணை தொடர்ந்துநடைபெறுகின்றது.

இக்கடிதம் கிடைத்தபின் யாழ்ப்பாணப் பட்டின சபைத் தலைவர் யாழ்ப்பாணப் பட்டின சபை விசேஷ கூட்ட மொன்றை 21உ கூட்டியிருக்கிறார்.

உங்கள் கைக்கு
ஈழகேசரி
கிடைத்ததா
?
சந்தா அதிபர்
"ஈழகேசரி"
சுன்னுகம், இலங்கை.
சிங்கப்பூர் ஏஜெண்டு
க. முத்துத்தம்பி
27. கம்போங் பாரு ரோட்
சிங்கப்பூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org